விலை ரூபா: ௫.00          பககங்கள:-பதது          Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
# VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம்
தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 03     வள்ளுவர் ஆண்டு 2033     ஐப்பசி23 சனிக்கிழமை (09.11.2002)     தொலைபேசி~ 2223378     ஒலி 325

மேலும் படங்கள் உள்ளே...



நேற்று யாழ்நகரில் இடம் பெற்ற பேரணியில் கலந்து கொண்ட ஒரு பகுதி மக்களையும், யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சிறில், யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கத்திடம் மகஜர் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.
படங்கள்:- ஜெயக்காந்தன்,டானியல்.

## தமிழீழத் தலைவருக்கு ஸ்ரீ லங்காவில் சிறையா?

# யாழ். நகரில் கண்டனப் பேரணி

# மடை திறந்த வெள்ளம் போல் மக்கள் கூட்டம் ஆர்ப்பரிப்பு

(அலுவலக நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 200 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அளித்த தீர்ப்பை ஆட்சேபித்து நேற்று யாழ். நகரில் வரலாறு காணாத மாபெரும் மக்கள் பேரணி இடம் பெற்றது.**

**இப் பேரணியில் யாழ்.குடா நாட்டின் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி,தீவகம் ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் அலையென திரண்டு வந்து கலந்து கொண்டனர்.**

யாழ்.பல்கலைக் கழக வளாக முனறலில் இருந்து நேற்று முற்பகல் 11.30 மணிக்கு ஊர்வலம் ஆரம்ப

எடுத்துச் செல்லப்பட அதன் பின்னே மதகுருமார் சென்றனர்.

மதகுருமாரின் பின்னால் யாழ்.

புக்களின் தலைவர்கள் முன்னே செல்ல மக்கள் அலை அலையாக பின்னே திரண்டு சென்றனர்.

## முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிகள் பகிஷ்கரிப்பை கைவிட்டனர்

(கொழும்பு)

சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது பாராளுமன்றப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நேற்றுக் கைவிட்டுள்ளனர்.

நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை மேற் கொண்டனர். இதன் போது ஏற்றுக் கொள்ளக் கூடிய உடன்பாடு கிடைத்ததையடுத்து பகிஷ்க்கரிப்புப் போராட்டம் கைவிடப பட்டதாகப் பிரதி அமைச்சர் அப்துல் காதர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண முஸ்லிம்களின்
(10ம் பக்கம் பார்க்க)

கைவிட்டுள்ளனா.

நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவைச் சந்தித்து கலந்துரை காதா தொிவித்துள்ளாா.

கிழக்கு மாகாண முஸ்லிம்களின்

(10ம் பக்கம் பார்க்க)

யாழ்.பல்கலைக் கழக வளாக முன்றலில் இருந்து நேற்று முற்பகல் 11.30 மணிக்கு ஊர்வலம் ஆரம்ப மானது. ஊர்வலத்தின் முன்னே சென்ற வாகனத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் கம்பீரமான தோற்றத்துடனான படம் எடுத்துச் செல்லப்பட அதன் பின்னே மதகுருமார் சென்றனர்.

மதகுருமாரின் பின்னால் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் வணிகர் கழகப் பிரதிநிதிகள் துறை சார்ந்த அமைப் புக்களின் தலைவர்கள் முன்னே செல்ல மக்கள் அலை அலையாக பின்னே திரண்டு சென்றனர்.

பேரணியில் சென்றவர்கள், பல் வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுலோக அட்டைகளையும், தமிழீழ

(10ம் பக்கம் பார்க்க)

# மாவீரர் தினத்தை எழுச்சியுடன் அனுஷ்டிக்க விரிவான ஏற்பாடு

(கிளிநொச்சி)

தமிழீழ மாவீர் தினத்தைத் தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் மிகவும் உணர்வு பூர்வமாகவும்,எழுச்சியுட னும் அனுஷ்டிப்பதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இம் மாதம் 21ம் திகதி முதல் 27ம் திகதி வரை அனுஷ்டிக்கப் படும் இம் மாவீரர் வாரம் யாழ்ப்பா ணம்,கிளிநொச்சி,மன்னார் முல் லைத்தீவு வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு,அம்பாறை ஆகிய மாவட்டங்களில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுவதற்கான ஏற்பாடு கள் இடம் பெற்று வருகின்றன.

இதனையொட்டி மாவீரர் துயிலும் இல்லங்கள் புனரமைக்கப்படுகின்றன

(10ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் உரிமை பாதுகாக்கப்படும்

# பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள எம்.பிகளுக்கு பிரதமர் ரணில் கடிதம் மூலம் உறுதி

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு காணப்ப டும் தீர்வில் முஸ்லிம்களின் பாது காப்பும் உரிமைகளும் பாதுகாக்கப் படும் என்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்க பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வரும் எம்.பிக்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு மாத காலமாக பாரா ளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வரும் 9 முஸ்லிம் எம்.பிக்கள், முஸலிம் களின் விவகாரம் தொடர்பாக எழுத்து மூல உறுதியைக் கோரிவருகின் றனர். இதனையடுத்தே பிரதமர் மேற்படி உறுதியை வழங்கியுள்ளார்.

கடிதம் எழுதியதைத் தொடர்ந்து உடனடி நடவடிக்கையில் இறங்கிய பிரதமர் முஸ்லிம்கள் பாதிப்புக்குள்ளா கக கூடிய இடங்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைளுக்கு உத்தரவிட்டுள்ளார். உட்துறை அமைச்சின் செயலாளர், பொலிஸ் மாஅதிபர், அதிரடிப் படைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா

(10ம் பக்கம் பார்க்க)

## அன்ரனாப் பைப்பைத் திருப்பிய வேளை

# மின்சாரம் தாக்கியதில் தந்தையும் மகனும் கருகிப் பலி

## நாவாந்துறையில் துயரச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அன்ரனாப் பைப்பை திருப்பி சரி செய்து கொண்டிருந்த போது அது தற செயலாக சாய்ந்து அருகில் இருந்த மின்சாரக் கம்பி மீது விழுந்ததினால மின்சாரம் தாக்கி,அன்ரனாப் பைப்பை திருப்பிக் கொண்டிருந்த தந்தையும் மகனும் அவ்விடத்திலேயே கருகி பரி தாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 5மணியளவில் யாழப்பாணம் நாவந் துறைப் பகுதியில், முஸ்லிம் பள்ளி வாசலுக்கு அருகில் இடம் பெற்றது.

இப் பரிதாபகரமான சம்பவத்தில் அவ்விடத்தில் வசிக்கும் சூசை வீர சிங்கம்(வயது 55) அவருடைய மகன் உருத்திரகுமார்(வயது 17) ஆகிய இரு வருமே உடல் கருகி மரணமானவர் கள்.

(10ம் பக்கம் பார்க்க)

# யப்பான் தூதுக் குழு நேற்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த யப்பானியத் தூதுக் குழுவினர் நேற்றுக் கிளிநொச்சிக்கு சென்று தமிழீழ விடுதலைப் புலி களின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந் தித்து பேச்சுவார்த்தை நடத்தி யுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள நடுவப் பணியக மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30மணியளவில் இப்பேச்சுக்கள் ஆரம்பமானது. இப் பேச்சுவார்த்தை

(10ம் பக்கம் பார்க்க)

வாசகர்களே:-
இன்று
வலம்புரியின்
வாரமலர்
சங்கு நாதம்
விலை ரூபா 12/-

## சிறு விளம்பரம்


### வகுப்புகள்

ஆண்டு 1ல் இருந்து மேற்படிப்பு வரை SPOKEN ENGLISH மற்றும் இலக்கணம், சடிதம் ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) K. K. S. வீதி, யாழ்ப்பாணம் நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை:

(6176)

### விற்பனையாகின்றன

போட்டிப் பரீட்சைகளுக்கு பொதுஅறிவு, மொழித்திறன், உளச்சார்பு, அழகியல்( தரம் 1- 5வரை) 2003ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?கந்தசஷ்டி கவசங்கள், சனீஸ்வர வியாழ மாற்றப் பலாபலன்கள்? V. A சிவராசா வெளியிட்டது என்று கேளுங்கள்: 152B அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம்

(6174)


# வருடாந்த பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன்கோவிலின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு ஆலய மண்டபத்தில் தலைவர் ந. ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் 2002, 2003ம் ஆண்டுக்குரிய சந்தாப்பணமான ரூபா 20ஐ செலுத்தி பற்றுச்சீட்டை பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ- 5)

# இந்தியாவின் புதியதலைமை நீதிபதி

(புதுடில்லி)

இந்தியாவின் தலைமை நீதிபதியாக நீதிபதி கோபாலு பட்னாயக் நேற்று பதவியேற்றுக் கொண்டார். இவர் இந்திய குடியரசுத் தலைவர் மாளிகையில் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து பதவியை ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டு ஒரிசா மாநிலத்தின் நீதிபதியாக நியமிக்கப்பட்ட கோபாலு பட்னாயக் பின்னர் 1995 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவிவகித்து தற்போது இந்தியாவின் தலைமை நீதிபதியாக பதவியேற்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2)

# பாலித்தீவு குண்டுவெடிப்பு மேலும் ஒருவர் பிடிபட்டார்

(ஜகார்த்தா)

பாலித்தீவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புடன் தொடர்புடைய மற்றுமொரு நபரை ஜாவாப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்ரோன்ஜி என்றஇந்நபர் பாலியில் கடந்த மாதம் 12 திகதி நடந்த தாக்குதலில் 200பேர் கொல்லப்பட்ட சம்பவத்தோடு தமக்கு தொடர்புண்டு என ஒப்புதல் வாக்கு மூலம்அளித்துள்ளார்.

இச் சம்பவத்தில்பயன்படுத்தப்பட்ட மினி வான் சாரதியொருவரை கடந்த புதன்கிழமை ஜாவாப் பொலிஸார் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் தற்போது கைது செய்யப்பட்டுள்ள அம்ரோன்ஜியை பாலியிலிருந்து கிழக்கு ஜாவாவிற்கு கொண்டு சென்று மேலதிக விசாரணைகளை நடத்தவுள்ளதாக ஜாவாப் பொலிஸார் தெரிவித்தனர்.

(உ-4)

# சமாதானத்தின் மீதான நம்பிக்கையை நீதிமன்றத் தீர்ப்பு ஏமாற்றிவிட்டது

## பொது அமைப்புக்கள் பிரதமருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

ஆயுதமோதலுக்கு ஒருமுடிவு கட்டி சமாதானப்பேச்சுக்கள் நல்லசூழ்நிலையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் மத்தியவங்கிக் குண்டுத் தாக்குதல் வழக்கில் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு ஸ்ரீலங்கா மேல்நீதிமன்றத்தினால் 200வருட கடுழியச் சிறைத்தண்டனை வழங்கிய முறையானது தமிழ் மக்களை மாத்திரமின்றிசமாதானத்தை நேசிக்கின்ற மக்கள் மத்தியில் பெரும்ஏமாற்றத்தையும் எதிர்கால வாழ்வின் நம்பிக்கையையும் தகர்த்ததாகவே கருதுகின்றோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு200வருடச் சிறைத் தண்டனை வழங்கி கொழும்பு மேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைக் கண்டித்து நேற்று நடைபெற்ற மாபெரும் மக்கள் பேரணிமுடிவில் யாழ் மாவட்ட அரசாங்கஅதிபர் செ.பத்மநாதன் ஊடாக பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவுக்கு அனுப்பிவைக்கப்பட்டமகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் நீதி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர்,மற்றும் இலங்கையில் உள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மகஜரில் மேலும்குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

கடந்த காலங்களில் நிகழ்ந்த சில அரசியல் பிரச்சினைகளைகுறுகிய வரலாற்றுக்கண்ணோட்டத்தில் அணுகியதால் ஏற்பட்ட விளைவின் வக்கிரமாகவே இதைநாம்கருதுவது மட்டுமல்லாது தமிழீழ மக்களின் தேசிய பிரச்சினைகள் குறித்து சிங்கள, தமிழ்ச் சமுகங்கள் மத்தியில் துளிர்விட்ட உணர்வும் உறவும் வேறுபட்ட பார்வைக்குத் தூபமிடும் செயலாகவே இதை நாம் கருதுகின்றோம்.

நீதிமன்றத்தை நாம்மதிக்கின்றோம் ஆனால் இந்தநீதிமன்றத்தின் தீர்ப்பானது குறுகிய அரசியல் கண்ணோட்டம் ஆழப்புதைந்த வெளிப்பாட்டின் அடையாளமாகும் காலம் காலமாக இனவாத அரசியலில் புரையோடிக் கிடந்த பேரினவாதிகளுக்கும் சமாதானத்துக்கு எதிரான தீயசக்திகளுக்கும் நல்ல தீனியாக அமைந்துள்ளதை எண்ணி வேதனைப்படுகின்றோம் வெட்கித்தலைகுனிகின்றோம் மேலும்சமாதான செயற்பாடுகள் கனிந்துவரும் இவ்வேளையில் சர்வதேச ரீதியில் புகழ்பெற்றுள்ள எமது தன்னிகரில்லாத் தலைவருக்கு எதிராக ஸ்ரீலங்கா நீதித்துறையானது வழங்கியிருக்கும் தீர்ப்பால் நீதித்துறையையே உலகம் எள்ளி நகையாட வைத்துள்ளமை தெளிவாகின்றது

இப்படியான கேலிக்கூத்துக்களை வன்மையாகக் கண்டிப்பதோடு இத்தகைய நடவடிக்கைகள் சமாதானச் செயற்பாடுகளை முற்றாக செயலிழக்க வைத்துவிடும்.

போரினால் சிதைந்துபோயிருக்கும் தமிழர் தாயகத்தின் போர் நெருக்கடிகளை முழுமையாகத் தணித்து இயல்பு நிலையைத்தோற்றுவிப்பதே ஸ்ரீலங்கா அரசினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் உடன்பாட்டு விதிகளினதும் நல்லெண்ண நடவடிக்கையினதும் குறிக்கோளாகும்.

ஆனால் இந்தநீதிமன்றத் தீர்ப்பினால் இவை சிதைந்து போகாது பக்திரமாக பாதுகாப்பதும் பேணிநடப்பதும் அரசின் தார்மீகக் கடமையென்பதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்நீதிமன்றத் தீர்ப்பினால் வேதனையும் மனக்குமுறல்களுக்கும் உள்ளாகியுள்ள மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தீர்ப்பை மீளப்பெறாத பட்சத்தில் நாடளாவிய மக்கள் போராட்டத்தை அரசுசந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குதள்ளப்படும் என்பதை கோடிட்டுக்காட்டி மக்கள் பேரணியூடாக இந்த மகஜரைதங்கள் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம் என்றுள்ளது.

(ந-9,6,7,16)

# ஐக்கியதேசிய முன்னணி அரசில் மேலும் எட்டு அமைச்சர்கள்

## பெயர்ப்பட்டியல் ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தில் மேலும்எட்டு அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளனர் இதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

7கருத்திட்ட அமைச்சர்களும் ஒருபிரதிஅமைச்சரும் இவ்வாறு நியமிக்கப்படவுள்ளனர்.

இப்புதிய அமைச்சர்களின் பெயர்ப்பட்டியல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடாளுமன்றில் உறுப்பினர்களாக உள்ள எட்டுப்பேரே இவ்வாறு அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கமைய விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சராக சேலிபரம்புக்வெல, உல்லாசப் பயணத்துறை அமைச்சராக றஞ்சித் மத்துமபண்டார மற்றும் காணி மற்றும் உறுதி அமைச்சராக லக்கி ஜெயவர்த்தன, நெற்செய்கைத்துறை அமைச்சராக டி.எம்.பண்டாரநாயக்கா, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சேமநலன் அமைச்சராக யாப்ப அபயவர்த்தனா, விவசாயத்தொழில்துறை அமைச்சராக ஹேமகுமார நாணயக்கார, அவசரசேவைகள் தொடர்பான அமைச்சராக சரத்சந்திரராஜகருணாவும்,ஜெயசுந்தர விஜயக்கோன் வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார பிரதி அமைச்சராகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

(உ-8)

## யாழ். மாவட்டப் பாடசாலை உதைபந்தாட்ட சங்க மீளமைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்கத்தை மீள் புனரமைப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 13ஆம்திகதி புதன்கிழமை முப 10. 00மணிக்கு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கைப் பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் சங். சகோ. கிறான்வில் பெரேரா, செயலாளர் உபாலிசில்வா, கல்வி அமைச்சின் விளையாட்டுத்துறை உதவிச் செயலாளர் நிமால் தென்னக்கோன் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

உதைபந்தாட்ட அணிகளைக் கொண்டுள்ள பாடசாலைகளின் அதிபர்களும் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்களும் தவறாது இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டம் சம்பந்தமாகவும் விளையாட்டு உபகரணங்களின் குறைபாடுகள் பற்றியும் புதிய சட்டதிட்டங்கள் அடங்கிய விடயங்களும், பிரச்சினைகள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ)

# நேற்றைய பேரணியில் ஒலித்த கோசங்கள்

((யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் விதித்த 200 வருட சிறைத் தண்டனைதீர்ப்பை ஆட்சேபித்து யாழ். குடாவில் நேற்றுநடைபெற்ற ஆட்சேபப் பேரணியில் சென்றோர் தாங்கிச் சென்ற சுலோகங்களும், ஒலித்த கோசங்களும் வருமாறு,

- உலகம் போற்றும் உன்னத தலைவனுக்கு சிறைத் தண்டனையா? இதனைத் தமிழ் இனம் பொறுத்துக் கொள்ளுமா?
- தமிழர் தலைவனை சிறையில் இடுவதா?
- சிறிலங்கா அரசே எம் தேசத்தலைவனுக்கு தண்டனை கொடுப்பது நீதியா?
- எமது தேசியத்தலைவனது 200 வருட சிறைத் தண்டனையை ரத்துச்செய்.
- சமாதானத்தை இலங்கை அரசு விரும்பவில்லையா? ஏன் இந்த சிறைத்தண்டனை
- ஒரு இனத்தின் விடுதலை உணர்வை அடக்குமுறையாலும், ஆயுதபலத்தாலும் அடக்கிவிடமுடியாது.
- பேச்சு மூலம் தீர்வு எமக்குஇல்லை எனில் தனித் தமிழீழம்வேண்டி தானைத் தலைவனோடு அணிதிரள்வோம்.
- தாய்லாந்துமேடையில் ஒரு பேச்சு சிங்களத்து நீதி மேடையில் சதிமூச்சு தமிழரின் மனநிம்மதி போச்சு.
- மொழியும் மண்ணும் விழியென்றால் தலைவன் எங்கள் உயிரன்றோ என்பன போன்ற பல சுலோகங்களை பேரணியில் சென்றோர் தாங்கிச்சென்றனர்.

(வ 6, 7, 9, 16, 245)

## மனிதஉரிமை பயிற்சிக் கருத்தரங்கில் பாராளுமன்ற உறுப்பினர் பலர் பங்கேற்கவில்லை

(கொழும்பு)

மனித உரிமைகள் சம்மந்தமாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக நேற்றுநடத்தப்பட்ட பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்டோர் தொகை மிகவும் குறைவாக இருந்ததாக சர்வதேச செஞ்சிலுவைசங்கம் குறைகூறியுள்ளது.

மனிதஉரிமைகள் சம்பந்தமாகவும் அதுதொடர்பான உடன்படிக்கை பற்றியும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனேயே இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம் நடைபெற்றுவருவதாலேயே தங்களால் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ள முடியவில்லை என்றும்.

இதற்கென வேறொரு நாளை ஒதுக்கித்தருமாறு பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எஸ்.அஸ்வர் சபாநாயகர் யோசப்மைக்கல் பெரேராவை தாம்கேட்டுக் கொண்டதாகவும் கருத்தரங்கில் கலந்துகொள்ளாத பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்பக்கத்தை நியாயப்படுத்தியுள்ளனர்.

(உ-8)

## மாநில சபைக்கு பரூக் அப்துல்லா போட்டி

(புதுடில்லி)

ஜம்மு- காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் பரூக் அப்துல்லா மாநில சபைத் தேர்தலில் போட்டியிடுவார் என்று தேசிய மாநாட்டு கட்சியின் பொது செயலர் சேக்மது தெரிவித்துள்ளார்.

மாநில சபை தேர்தலில் போட்டியிடவுள்ள பரூக் அப்துல்லா தனது வேட்புமனுவை நேற்று தாக்கல் செய்தார்.

(02)

# இழந்த தென்னைகளை ஈடுசெய்ய தென்னை மீள்நடுகைமானியத்திட்டம்

## தெங்குப் பயிர்ச்செய்கைச்சபை முடிவு

(யாழ்ப்பாணம்)

தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் தலைவர் லிங்கன் பெர்னாண்டோ, ஆலோசகர் பராக்கிரம ஜயதிலக்க ஆகியோர் சென்றவாரம் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் யாழ். மாவட்டத்திற்கும் விஜயம்செய்தனர்

பிராந்திய முகாமையாளர் சி. சிவசந்திரன் இவர்களை மேற்படி இரு மாவட்டங்களிலும் தெங்குப் பயிர்ச்செய்கையில் கடந்த இரு தசாப்தங்களில் ஏற்பட்ட பாதிப்புக்கள் இழப்புக்களை காண்பித்தார்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் ரி. இராசநாயகம், யாழ். மாவட்ட அரசாங்கஅதிபர் என். பத்மநாதன் ஆகியோரைச் சந்தித்து தெங்குச் செய்கை விருத்திக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இவர்களால் விரிவாக ஆராயப்பட்டது.

அதன்படி பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

- போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தென்னந்தோட்டங்களை மீள் நடுகை செய்வதற்கு 'தென்னை மீள் நடுகைமானியத் திட்டத்தைஆரம்பித்தல்'
- தற்பொழுது மிகுதியாய் அழியாமல் இருக்கும் தென்னைமரங்களில் இருந்து உச்ச வருவாயை பெறும் பொருட்டு உரம் இடுதலை ஊக்குவித்தல், அதற்காக ஒரு சிறு ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குதல்.
- உரம்இடப்பட்ட தென்னந்தோட்டங்களில் எதிர்வரும் காலத்தில் ஈரலிப்பை பேணி வரட்சிகாலத்தை தாக்குட்பிடிக்க, உரிமட்டை புதை குழிகளை அமைப்பதற்காக ஒரு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குதல்.
- தகுதியான இடங்களில் புதிதாக தென்னந்தோட்டங்களை உருவாக்க 'தென்னை புது நடுகை மானியத் திட்டத்தை' ஆரம்பித்தல்.
- தற்பொழுது 25, ஆயிரம் விதை தேங்காய்கள் நாற்றுப் போடப்பட்டுள்ள அச்சுவேலி நாற்றுப் மேடையையும், கிளிநொச்சி நாற்று மேடையையும், மேலும் 50 ஆயிரம் தேங்காய்கள் நாற்று போடக்கூடியவாறு பெருப்பித்தல், 2003 ஆம் ஆண்டில் மேற்படி இரு நாற்று மேடைகளிலும் 15 ஆயிரம் தேங்காய்களை நாற்றிடுதல்.
- தற்பொழுது மேற்படி இரு நாற்று மேடைகளிலும் உள்ள தென்னம் நாற்றுக்களை மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்க அதிபர் ஊடாக இலவசமாக வழங்கி அவர்களின் வீட்டுத் தோட்டங்களை மேம்படுத்துதல்.

தெங்குச் செய்கையாளர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட 'அழிவடைந்த தென்னந்தோட்டங்களுக்கு நஷ்டஈடுவழங்குதல்' பற்றி புனர்வாழ்வு அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் இக் குழுவினர் தெரிவித்தனர்.

வட பகுதியில் தென்னை வளத்தை மேம்படுத்த தன்னால இயன்ற முயற்சிகளை பல மட்டங்களிலும் எடுத்துக் கொண்டிருப்பதாகவும், எதிர்வரும் காலங்களில் எடுக்க தயாராய் இருப்பதாகவும் இவர்கள் மேலும் சுட்டிக் காட்டினர். (உ)

## வினைத்திறன் தடை காண் பரீட்சை

(சுதுமலை)

சுகாதார போசாக்கு நலநோன்பு அமைச்சின் கீழ் கடமை புரியும் வைத்திய அதிகாரிகள் மற்றும் பல் வைத்தியர்களிற்கான வினைத்திறன் தடை காண் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் வைத்திய அதிகாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ-252)

## குடாரப்பு பகுதியில் மீளக்குடியமர அனுமதி

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள குடாரப்பு பகுதியில் பொதுமக்கள் மீளக் குடியமர கடற்புலிகள் அனுமதிவழங்கியுள்ளனர்.

மாமுனை அ.த.க பாடசாலையில் வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் பதில் பொறுப்பாளர் யாழ்மன்னன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தின் போது மேற்படி மீள்குடியமர்வு அனுமதி வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சுமார் 100 குடும்பங்கள் மீளக்குடியமரவுள்ளன. (உ-43)

யாழ். பொருளாதார மேம்பாடு குறித்து

## ஐ. நா. முகவர் நிறுவனம் வணிகர்கழகத்தில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

ஐக்கியநாடுகள் அபிவிருத்தி முகவர் நிறுவன சிரேஷ்ட ஆலோசகர் ஏஸ். மொறிஸ் தலைமையிலான 4பேர் கொண்ட ஐ. நா. அபிவிருத்தி முகவர் நிறுவனக்குழு நேற்றைய தினம் யாழ் வணிகர் கழகத்திற்கு விஜயம் செய்தது.

அங்கு யாழ் வணிகர்கழகத் தலைவர் எஸ். ஜெயசேகரம் தலைமையில் இடம் பெற்ற சந்திப்பில்

யாழ்ப்பாணப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வழிவகைகள் சர்வதேச அபிவிருத்தி யாழ் மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார மற்றும் சூழலியல் நெருக்கடிகள் குறித்து ஆராயப்பட்டன. (உ-16)

## இராசி பலன்

9- 11- 2002
(ஐப்பசி 23, சனி)
பஞ்சமி மு இ 7. 10வரை
பூராடம் பி. இ 2. 01வரை
இராகு காலம் 9. 05- 10 35
நல்லநேரம் 3. 05- 4. 35

**மேடம்**
கட்டுப்பாடு, வயிற்றுக் கோளாறு, காரிய தாமதம், புதிய திட்டம்

**இடபம்**
வாகனபயம், உறவினர் மனஸ்தாபம், காரிய தடங்கல், தொழில் நன்மை

**மிதுனம்**
களஸ்திர சுகம், பிரயாண நன்மை, ரோக நிவர்த்தி, முயற்சி கைகூடும்

**கடகம்**
சந்தோசமான சம்பவம், அதிகாரம், எண்ணங்கள் கைகூடும், உடல்நலம்

**சிங்கம்**
தொழில் விருத்தி, உடல் சோர்வு, வியாபார நன்மை, முயற்சி தாமதம்

**கன்னி**
மனக்கிலேசம், தாய்வழி உறவு, ரோகபயம், காரிய தாமதம்

**துலாம்**
அந்நியர் உதவி, தனவரவு, சுவாரஸ்யம், உறவினர் வருகை

**விருச்சிகம்**
சொத்துக்களால் பயன், பொருள விரயம், உறவினர் உதவி, முயற்சி தாமதம்

**தனுசு**
நல்லசிந்தை, பெரியோர் ஆதரவு, காரிய அனுகூலம், போசன சுகம்

**மகரம்**
உணர்ச்சி வசப்படல், செல்வாக்கு, தொழில் கஷ்டம், பொருள் விரயம்

**கும்பம்**
எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, நல்ல வரவேற்பு, குடும்ப சுகம்

**மீனம்**
செய் தொழில் மேன்மை, முயற்சி பலிதம், பெரியோர் மனஸ்தாபம், அதிகாரம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

வளவன்

## நவோத்திர சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ. துரைராசா மற்றும் முன்னாள் பதிவாளர் அமரர் ந. சிவராசா ஆகியோரது 69ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை மு. ப 10. 30 மணிக்கு பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (இ- 5)

## உதவு நிதி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் இயங்கும் ''ஏ'' தர சனசமூக நிலையங்களுக்கு ஆயிரத்து 600ரூபாவும் ''பீ'' தர சமூக நிலையங்களுக்கு ஆயிரத்து 400 ரூபாவும் இவ்வாண்டு உதவு நிதியாக வழங்கப்பட்டுள்ளது. (உ.9)

## நிலக்கண்ணி வெடித்ததில் இளைஞன் படுகாயம்

(அம்பாறை)

நிலக்கண்ணிவெடியை பரீட்சித்துப் பார்த்த இளைஞன் அதுவெடித்ததில் படுகாய மடைந்த சம்பவம் மண்டூர் 13 ஆம் கொலனியில் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் பாடுகாயமடைந்த ந.கிருபைரட்ணம் (வயது 22)என்பவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## சீருடை விநியோக கூப்பன் அடுத்தவாரம்அனுப்பப்படும்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு சீருடைவிநியோகிப்பதற்கான கூப்பன்கள் அடுத்த வாரமளவில் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுளளதாக கல்வி அமைச்சின்மேலதிக செயலாளர் தில்லை நடராஜா தெரிவித்துள்ளார்.

2003 ஆம் ஆண்டுக்கான சுமார் 3.8 மில்லியன் கூப்பன்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இக் கூப்பன்களை பாடசாலை மாணவர்கள் ஒவ்வொருவரும் பிரதேச செயலகமூடாகப் பெற்று, சீருடை விநியோக உத்தரவுபெற்ற வியாபாரிகளிடம்சீருடைகளை பெற்றுக்கொள்ளலாம்எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## 36 பாடசாலைகளை புனரமைக்க நடவடிக்கை

(தென்மராட்சி)

பாதுகாப்புப் படையினரின் பாவனையில்இருந்த 36 பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்கு கல்வித்திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது

இதனடிப்படையில் தென்மராட்சியில் 16 பாடசாலைகளும் வடமராட்சியில் 12 பாடசாலைகளும், யாழ்ப்பாணத்தில் 4 பாடசாலைகளும் தீவகத்தில் 4 பாடசாலைகளுமாக மொத்தம் 36 பாடசாலைகள்மூன்று கட்டங்களாகப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. (உ-77)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழுவின் செயலாளர் தலைமையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கூட்டுறவுக் கல்லூரி மண்டபத்தில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள், தெங்கு, பனம் பொருள் அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள்,பணியாளர்களை அமர்த்தியுள்ள சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர், பொது முகாமையாளர், செயலாளர்கள் ஆகியோர் இக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (உ-3)

## மீனவர் அ. அட்டை வழங்க நடவடிக்கை

(சண்டிலிப்பாய்)

கடற்றெழில் அமைச்சின் மீனவர் அடையாள அட்டை சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

மேற்படி அடையாள அட்டையைப்பெற விருப்பமுடையவர்களை தொடர்பு கொள்ளுமாறு சங்கம் கேட்டுள்ளது. (உ-258)

வெளிநாட்டில் தொழில் புரியும்

## இலங்கையரிடம் இருந்து 15 வீத வரி அறவிடப்படாது

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தில் வெளிநாடுகளில் தொழில் செய்யும் இலங்கையர்களிடமிருந்து 15 சதவீத வரி அறவிடுவதென குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இவ்வரியை அரசு அறவிடமாட்டாது என பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்; இது தொடர்பாக நிதியமைச்சர் கே. என். சொக்ஸி அறிக்கை ஒன்றினை வெளியிடவுள்ளார்.

வெளிநாடுகளில் தொழில் செய்வோர்க்கு கடந்த வரவு செலவுத் திட்டத்தின்படி வழங்கப்பட்ட தீர்வையின்படி ஆயிரத்து 500 டொலர்களில் இருந்து ஆயிரத்து 750 டொலர்களாக 2003 ஏப்ரல் முதலாம் திகதி முதல் அமுல் படுத்தப்படும் என வெளியிடப்பட்டது தெரிந்ததே.

அத்துடன், வெளிநாட்டில் உளள இலங்கையர்களிடம் 15 சதவீத வரியை அறவிடுவதாக கூறப்பட்டிருந்தவாறு, வெளிநாடுகளில் தொழில செய்வோர்களிடம் இருந்தும் இவ் வரி அறவிடபபடுமா? எனவும் பெர்னாண்டோபுள்ளே கேள்வி எழுப்பி உள்ளார். (உ-8(

## நல்லூர் பி. ச. வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையால் சனசமூக நிலையங்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளை உரிய முறையில் பயன்படுத்தும்படி நல்லூர் பிரதேச சபைத் தலைவர் என். மணி பல்லவராஜன் கேட்டுள்ளார்.

சில சனசமூக நிலையங்கள் உரிய முறையில் பாவிப்பதில்லை என முறைப்பாடுகள் தனக்கு கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பேச்சு,கட்டுரை

## போட்டிகள்

(யாழ்ப்பாணம்)



யாழ்.சைவபரிபாலனசபை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை தினத்தை ஒட்டி பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளை மாணவர் மட்டத்தில் நடத்தவுள்ளது.

இதற்கமைய தரம் 12,13 மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி மு. ப. 9.00 மணிக்கும்,

பேச்சுப்போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கும் வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (உ-9)

# மக்கள் பேரணியின் சில காட்சிகள்








படங்கள்- டானியல்-ஜெயகாந்தன்






# இன்று ஒரு தகவல்

## ஞானம் என்னும் முத்து

ஒரு பெரிய சந்தை பலர் வந்து போகின்ற இடம்அங்கே ஒருவன் பிச்சை எடுத்துக் கொண்டு நின்றான். வெகு காலமாக அவன் அந்த ஒரே இடத்தில் நின்று கொண்டே பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். ஆனாலும் அவன் வாயைத் திறந்து பிச்சை போடுங்கள்என்று யாரையுமே கேட்பதில்லை. தினமும் காலையில் வருவான். அந்த இடத்தில் நிற்பான். வலது கையை மட்டும் முன்னால் நீட்டி ஏந்திக் கொண்டிருப்பான். வாயைத் திறந்து எதுவும் பேசுவதில்லை. அந்தவழியால் வருகிறவர்கள், போகிறவர்கள் எல்லாம்அவன் கையில் ஏதாவது காசு போட்டு விட்டுப் போய்க் கொண்டேயிருப்பார்கள்.

அந்த ஒரேஇடத்தில் நின்று ஓர் ஐம்பது வருஷமாக அவன பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். திடீரென்று ஒரு நாள் அவன் செத்துப் போய் விட்டான். செத்துப் போய் அந்த இடத்திலேயே விழுந்து விட்டான். ஊர்ச் சனங்கள் எல்லோரும் பார்த்தார்கள். ஐயோ பாவம் இப்படி அநாதையாக விழுந்து செத்துப் போய் விட்டானே என்று பரிதாபப்பட்டார்கள். அந்த ஊர் மக்களுக்கு அவன் மீது மிகவும் அனுதாபம்! இவன பிச்சை யெடுத்துக் கொண்டிருந்தால் கூட,இவன் ஒருவித்தியாசமான ஆள். யாரையும் தொந்தரவுபண்ணுவதில்லை.

ஊர்மக்களெல்லாம் ஒன்று கூடி ஒரு தீர்மானம் போட்டார்கள். இந்தப் பிச்சைக் காரனுக்கு இதே இடத்தில் ஒரு சிலை வைக்க வேண்டும் என்று! உடனே நிதி வசூலிக்க ஆரமபித்தார்கள. பலா முன் வந்து தாராளமாக நிதி கொடுத்தார்கள். நிறையப் பணம சேர்ந்தது அந்த ஆள் நின்று கொண்டிருந்தஇடத்திலேயேஅத்திபாரம தோண்ட ஆரம்பித்தார்கள். ஓர் இரண்டடி ஆழம் தோண்டியிருப்பார்கள். திடீரென்று-ஒருவித்தியாசமான சத்தம்- டங் டங் என்று கேட்டது. அவசர அவசரமாகத் தோண்டிப் பார்த்தார்கள். ஒரு செபபுக் குடம் தெரிந்தது. எடுத்து அதிலே என்னஇருக்கிறதுஎன்றுபார்த்தார்கள. ஏராளமாகத் தங்க நாணயங்கள், வெள்ளிக் காசுகள் எல்லாம் இருந்தன.

அதைப்பார்த்ததும்கூட்டத்தில் இருந்தவர்களுக்குமிகவும் ஆச்சரியம். ஒருவர் சொன்னார். 'பார்த்தீர்களா? இந்தப்பிச்சைக்காரன் தன்னுடைய காலுக்கு அடியிலேயே புதையல்இருப்பது தெரியாமல், போகிறவர்கள் வருகிறவர்களிடம் எல்லாம் பைசாவுக்கு கையேந்தி நின்று கொண்டிருந்தே செத்துவிட்டான்' என்று,

அப்போது அந்தவழியால் ஒரு துறவிவந்தார். கூட்டத்தைப்பார்த்து 'ஆமாம்! ஒவ்வொரு மனிதனுமே இப்படித்தான் செய்துகொண்டிருக்கிறான். தன்னுடையமனதில் குவிந்திருக்கிற திறமையையும், மகிழ்ச்சியையும்,இன்பத்தையும். தெய்வத்தையும் அவன் புரிந்துகொள்வதில்லை அது வெளியில் எங்கேயோ இருப்பதாக நினைத்துக் கொண்டு-அதைத் தேடிக் கொண்டே காலம்பூராவும் கழித்துவிடுகிறார்கள்!' என்று சொல்லிவிட்டுப்போய் விட்டார்.

கூட்டத்தில் இருந்தவர்கள் அதன்பின்னர்தான் சிந்திக்க ஆரம்பித்தார்களாம். இந்தக் கதை எதற்காகவென்றால்.. நம்மிடம் என்னென்ன இருக்கிறதென்பதை நாம் சரியாகத் தெரிந்து கொள்வதில்லை. ஆனால் அவற்றைத்தேடி வெளியே அலைந்துகொண்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் அந்தத் தெருக்கோடியில் இருக்கிற பெட்டிக்கடையில் போய் ஓர் அரைக்கிலோ சந்தோஷத்தை வாங்கிக் கொண்டுவா என்றா சொல்ல முடியும்?

ஜினாய்ட் என்று ஒருஞானி இருந்தார். ஒரு சீடன் அவரிடம்வந்தான். 'உங்களிடம் ஞானம் என்கிற முத்து இருக்கிறதாகச் சொல்கிறார்களே! எனக்கு அதில் கொஞ்சம் தேவை. ஒன்று அதை என்னிடம் விற்றுவிடுங்கள். இல்லையென்றால் இனாமாகக் கொடுங்கள்' என்று கேட்டான். அதற்கு அந்தஞானி 'உனக்கு அதைநான் விற்பதற்குஇல்லை. ஏனென்றால், அதனுடைய விலையை உன்னால் கொடுக்கமுடியாது. சரி இனாமாகக்கொடுக்கலாம் என்றால்...இனமாகக்கொடுப்பதை நீ மதிக்கமாட்டாய் அதனால் என்னைப்போல நீயும் கடவுள் என்கின்ற சமுத்திரத்தில் மூழ்கி எழுந்திரு. நீயும் ஒரு முத்து எடுத்துக்கொண்டு வரலாம் என்றார். இவைகள் வெளியில் வாங்குகின்ற சமாச்சாரம் இல்லை, முயற்சி வேண்டும்.

ஒரு ஆசாமி! பத்தாயிரம் ரூபா லொத்தர் சீட்டில் பரிசு விழுந்ததாக இரவுக வு கண்டார். விடிந்து எழுந்ததும் அழுதுகொண்டே உட்கார்ந்திருந்தார். ஏன்? கண்டது கனவாகப் போயிற்றே என்பதற்காகவா? அதற்காக இல்லை. ஏன் ஐயா அழுகிறீர்கள் என்று கேட்டால், 'கனவிலே விழுந்தது ஒரு இலட்சமாக இல்லாமல் போய்விட்டதே! அதை நினைத்தால் தான் எனக்கு ஆத்திரமாக வருகிறது' என்று சொல்லிவிட்டு மறுபடியும் 'ஓ' என்று அழ ஆரம்பித்துவிட்டார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அழகி ரீட்டா கொலைவழக்கு மேன்முறையீட்டு மனு திங்களன்று விசாரணை

(கொழும்பு)

இந்திய அழகி ரீட்டா ஜோன் கொலை வழக்கு குற்றவாளிகளின் மரண தண்டனை மேன்முறையீட்டு மனு எதிர்வரும் திங்கட்கிழமை 5 நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

கொழும்பு உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ள இவ் வழக்கை விசாரணைக்கு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா 5 நீதிபதிகளை நியமித்துள்ளார்.

நீதிபதி டி.பி.எஸ்.குணசேகரா(தலைவர்), நீதிபதிகள் அமீர் இஸ்மாயில் பி. எதிரிசூரிய,ஜெகிரி, எஸ்.யஸ்பா, இ விக்கிரமேஸ்வரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

1999ஆம் ஆண்டு மட்டக்குளி காக்கை தீவில் அழகி ரீட்டா பாயில் வல்லுறவுக்குப் பின் கொலை செய்த குற்றத்திற்காக அஜித்பெர்னாண்டோ, சமிஸ்மென்டிஸ், சஜித் குமார ஆகியோருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம)

# இராணுவ உபகரணங்களை புலிகள் சேகரித்து வருகின்றனர்

## கதிர்காமர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சமாதான பேச்சுக்களில் புதிய திருப்பம் ஏற்பட்டிருப்பதற்கு காரணம் 19 வது திருத்தச் சட்டமூலத்திற்கு ஏற்பட்ட பின்னடைவே யாகும். அரசாங்கம் பலவீனமடைந்துள்ளது அது இனி மேலும் உறுதியானது என்று கருதுவதற்கிடமில்லை.

இதனால், சமாதானத்தையடைவதற்கு புலிகள்பொ ஐ. மு.வின் தீர்வுத்திட்டங்களில் தீவிரமாக கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர் என்று ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; புலிகள ஆயுதங்களையும், இராணுவ உபகரணங்களையும் சேகரித்து வருகின்றனர். இது நிகழவிருப்பதை முன்னறிவிக்கும் ஒருசமிக்ஞையாகும்.

ஆனால், இதுபற்றி அரசாங்கம் கவனமெடுத்திருப்பதாக தெரியவில்லை. அரசாங்கம் ஸ்திரமற்றதாக இருப்பதாக அன்ரன் பாலசிங்கம் கூறியிருப்பதை கருத்தில்கொண்டு இப்பொழுது ஜனாதிபதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது எனவும் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில கதிர்காமர் தெரிவித்துள்ளார். (இ)

## சூரன் போர்

(கோப்பாய்)

புத்தூர் ஆலடி முருகன் ஆலயத்தில் சூரன் போர் உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணியளவில் நடைபெறவுள்ளது (உ-79)

## 15 இலட்சம் ஒதுக்கீடு

(தென்மராட்சி)

காரைநகரில் மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கான வீடுகள் மற்றும் மலசல கூடங்கள் புனரமைப்புக்கென யு.என்.எச்.சீ ஆர். நிறுவனம் 15 லட்சத்தினை ஒதுக்கியுள்ளது. (உ-77)

## அ. அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

சரவணையை வசிப்பிடமாகக்கொண்ட புஸ்பராணி குணரெத்தினம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிப் பத்திரிகைக்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளமுடியும்.

## இசைச் சொற்பொழிவு

(கோப்பாய்)

புதுவை ஆலடி முருகன் ஆலயத்தில் சந்தசஷ்டி உற்சவம் நடைபெற்று வருகின்றது.

இன்றையதினம் பி.ப.2.00 மணியளவில் கவிமணி ஆனந்தராஜாவின் 'உதித்தனன் உலகமுய்ய' என்ற பொருளில் இசைச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது. (உ-79)

## கலந்துரையாடல்

(சண்டிலிப்பாய்)

வலிதென்மேற்குபிரதேசசெயலக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை மு. ப. 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலைய நிர்வாகிகள், கிராம அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர்கள் ஆகியோர் இக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (உ-258)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சந்தர்மடம் பழம் றோட் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகம் எதிர் வரும் 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் தலைமையில்-இக் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் பூர்த்திவிழா அன்று சங்காபிஷேகமும் கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (உ)

# கம்பன் கழகம் நடத்தும் 'இசைவேள்வி' இம்மாதம் 15 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கம்பன் கழகம் வருடந்தோறும் நடத்திவரும் ஸ்ரீ ராம நாம கானாமிர்தம் என்னும் பெயரிலான இசை வேள்வி இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் தினமும் மாலை 5.00 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

வழமைபோல் இவ்வாண்டும் நம் நாட்டு இசைக் கலைஞர்கள் மற்றும் பிரபல இந்திய இசைக் கலைஞர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

# முகாமில் தங்கியுள்ள மக்கள் மீளக்குடியமர்வில் ஆர்வம் குன்றிய நிலையில்

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற யுத்த நிலைகள் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் இன்னமும் இருந்து வருகின்ற குடும்பங்கள், கண்ணிவெடிகள், மிதிவெடிகள் பூரணமாக அகற்றப்படாமை, தொழில் வாய்ப்புகள் வசதிகள் இல்லாமை, அடிப்படைச் சுகாதார, கல்வி வசதிகள் இல்லாமை போன்ற காரணிகளினால் மீள்குடியமர்வில் போதியளவு ஆர்வமோ அக்கறையோ காட்டாமல் இருந்து வருகின்றதாகத் தெரியவருகின்றது.

இதன் காரணமாக 1990 முதல் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இடம்பெயர்ந்த வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி மற்றும் தீவகப் பிரதேசக் குடும்பங்கள பல இன்னமும் முகாம்களில் தங்கியுள்ளன. (உ-77)

# தீவக வைத்தியசாலைகளில் அடிப்படைவசதிகள் இல்லை

(தென்மராட்சி)

தீவகப் பிரதேசத்திலுள்ள புங்குடுதீவு, நெடுந்தீவு, அனலைதீவு அரசினர் வைத்தியசாலைகள் அடிப்படை வசதிகள்,வேண்டிய மருத்துவ உபகரணங்கள், அம்புலன்ஸ் வண்டி என்பன அற்ற நிலையே இன்னமும் இயங்கி வருகின்றன.

இதன் காரணமாக இவ் வைத்தியசாலைகளுக்கு சிகிச்சை பெறச் செல்கின்ற நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ் வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகளைத் தீர்க்கும்படி பல பொது அமைப்புகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ள போதிலும்,எவ்விதமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என அறியப்படுகின்றது. (உ-77)

# பொ. ஐ. மு. எம். பிக்கள் கட்சி மாறிய பின்னரே பாராளுமன்றக் கலைப்பு எஸ்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு தீர்மானிக்குமாயின் ஜனாதிபதி பெரும்பான்மையுடன் கூடிய ஒருவருக்கு ஆட்சி அமைப்பதற்கு அழைப்பு விடுக்க முடியும்.

ஆனால் தற்போதைய பாராளுமன்றத்தில் அப்படி ஒருவரை தெரிவு செய்ய முடியாதென சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

அம்பரஹமுவ பிரதேச சமுர்த்தி அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

பொதுஜன ஐக்கிய முன்னணியை சேர்ந்த 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்த பின்னரே பாராளுமன்றத்தை கலைப்பது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமையில் பெரும்பான்மையை பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்தைச் சேர்ந்த 19 பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதியால் இழுத்துக்கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ. 8)

# முஸ்லிம் நிர்வாக அலகு விடயத்தில் விட்டுக்கொடுப்புகளுக்கு இடமில்லை

## வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் தெரிவிப்பு

(லண்டன்)

**தமிழ் மக்களுக்கு நிம்மதியான ஒரு சுயாட்சி கிடைக்கின்றபோது அதே சுயாட்சி உரிமையை வடக்கு- கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களும் கேட்பதில் எந்த நியாயமும் இல்லை என யாரும் தட்டிக் கழிக்க முடியாது. அக்கோரிக்கையை மலினப்படுத்தவும் கூடாது.**

இவ்வாறு வன்னிப்புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அப்பேட்டியில் தெரிவிக்கையில்;

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் முஸ்லிம் மக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டும் என்பதை கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளார்;

அதே போன்று அரசாங்கமும் முஸ்லிம் மக்களுக்கான மாற்றுத்திட்டமொன்றைமுன் வைக்க வேண்டும் என்பதை கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த நிலையில் அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் முஸ்லிம் மக்களின் உரிமை தொடர்பான கோரிக்கைக்கு இணங்குவார்கள் என்ற பெரிய நம்பிக்கை முஸ்லிம் மக்கள் மத்தியில் உண்டு;

அரசு- புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் மக்களது பிரச்சினைகள் சம்பந்தமாக உரிய நேரத்தில் பேசித் தீர்க்கலாம் என எமது தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்துள்ளார்;

வன்னிக்குச் சென்று புலிகளின் தலைவர்களுடன் அது குறித்துப் பேசலாம் என்ற நிலைப்பாடும் அவரிடத்தில் உள்ளது.

எதுவாக இருந்தாலும் நிர்வாகப் பிரிப்பின் போது எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு எமது கைகளுக்கே வரவேண்டும்.

இதில்எந்தவிட்டுக் கொடுப்புக்கும் இடமிருக்கக் கூடாது.

இதேவேளை, எமது நாடாளுமன்ற பகிஷ்கரிப்புத் தொடர்பாக பிரதமர் சாதகமான பதில் தருவாராயின் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு அரசுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் அமைச்சர் நூர்தீன் மசூர் தெரிவித்தார். (த)

## 10 பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு திட்டங்கள்

(சுதுமலை)

மானிப்பாய், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள 10 பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் 32 டெங்கு ஒழிப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பான செயற்றிட்ட அறிக்கையினை மானிப்பாய், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கணேஸ்வரராஜா வலி. தென் மேற்குபிரதேச செயலர் மற்றும் வலி மேற்கு பிரதேச சபை ஆகியவற்றுக்கு அனுப்பி வைத்துள்ளார். (உ-252)

## மூன்று இந்தியத் திரைப்பட நிறுவனங்கள் இலங்கை வர விருப்பம்

(கொழும்பு)

சிங்களத் திரைப்படங்களை தயாரிக்கும் 3 இந்திய திரைப்பட நிறுவனங்கள் இலங்கை வர விருப்பம் தெரிவித்துள்ளதாக திரைப்பட கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜெயந்த வர்மராசா தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை திரைப்படத் துறையை மேம்படுத்த 12 விசேடகுழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டத்தின் கீழ் திரைப்படங்களின் இராசாயான கூடல் நடவடிக்கைகளை இலங்கையிலேயே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## கல்வளை கிராமத்தில் போஷாக்குத் திட்டம்

(சுதுமலை)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள கல்வளை கிராமத்தில் யுனிசெவ் ஆதரவுடன்போஷாக்குத் திட்டம்செயற்படுத்தப் படவுள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள சுமார் 50 குடும்பங்கள் இத்திட்டத்தில் இணைக்கப் படவுள்ளன;

இவர்களுக்குவீட்டுத் தோட்டம் தொடர்பான பயிற்சிமி விரைவில் வழங்கப்படவுள்ளது. (உ-252)

## பிரிட்டன் அரசியல் பிரமுகர்கள் யாழ்.நிலைவரத்தை நேரில் அறிவர்

(கொழும்பு)

பிரிட்டன் உதவி வெளி விவகார அமைச்சர் கிளியோபோட் அடுத்தமாதம் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இம் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் பிரிட்டனின் சார்பாக இவர் கலந்து கொள்ளவுள்ளார்.

இலங்கை வரும்போட், அரசின் உயர் மட்ட அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்;

இதற்கிடையில், பிரான்ஸ் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் வெளிவிவகார பிரதியமைச்சர்களும் இலங்கை வரவுள்ளனர்.

அதேவேளை, பிரிட்டிஷ் பாராளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவின் இணைத் தலைவர் நோஸ்பி பிரபுவும் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன் கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்;

யாழ்ப்பாணம் வரும் இவர் யாழ்ப்பாண நிலைமைகளை நேரில் அறிவதுடன் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடும் தொண்டர் நிறுவனங்களையும் சந்திக்கவுள்ளதுடன், யாழ். பொது சன நூலகத்தையும் பார்வையிடவுள்ளனர்; (உ-8)

## கூட்டுசெயலணி பிரதிநிதிகள் தெரிவு

## மு. கா. உயர்மட்டம் கூடி ஆராய்ந்தது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் அதிஉயர் பீடம் நேற்றுமுன்தினம் இரவு துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கூடியது.

நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் ஆரம்பமாகி நேற்று அதிகாலை 2.00 மணிவரை நடைபெற்ற இக் கூட்டத்தில் விசேட தீர்மானங்கள் அல்லது முடிவுகள் எவையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பான கூட்டுச்செயலணிகளுக்குபிரதிநிதிகளை தெரிவு செய்வது தொடர்பாக ஆராயவே இக்குழு நேற்றுமுன்தினம் கூடியது;

இக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சுமார் 15 அரசியல் அதிஉயர் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். தாய்லாந்தில்2 ஆம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் அமைச்சர் ரவூப்ஹக்கீம் கட்சியின் உறுப்பினர்களை முதற் தடவையாக இச்சந்தர்ப்பத்தில் சந்தித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## ஆட்டோ மோதி சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்றுகொண்டிருந்த வேளை பின்னால் வந்த முச்சக்கரவண்டி மோதியதில் காலில் படுகாயமடைந்த சிறுவன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

யாழ்.நகரப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எம். மஜித் (வயது 8) என்ற சிறுவனே காயமடைந்துள்ளான். (உ-6)

## சுதந்திரன் சிறுகதைகள் ஞாயிறன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் இலக்கிய வட்ட ஏற்பாட்டில், சுதந்திரன் சிறுகதைகள் வெளியீட்டு விழாவும், ஏனைய பத்து நூல்களின் அறிமுக விழாவும் படைப்பாளிகள் கௌரவிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் செங்கை ஆழியான் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை புத்தொளி ந. சிவபாதமும், வெளியீட்டுரையை சிற்பி சரவணபவனும், அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக மூத்த தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதிஎஸ்.சிவலிங்கராசாவும் நிகழ்த்தவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் பிரதம விருந்தினராகவும், யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## மன்னார் கூ. செயலகத்தை கையளிக்கக் கோரிக்கை

(மன்னார்)

இராணுவத்தினரின் வசமுள்ள மன்னார் கூட்டுறவுச் செயலககட்டடத்தைமீண்டும் மாவட்ட கூட்டுறவு சபையினரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்எனவேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர்செ. அடைக்கலநாதன், பாதுகாப்புஅமைச்சர் திலக் மாரப்பனவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்திலேயே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் பாதுகாப்பு அமைச்சருக்கு இது தொடர்பாக அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

மன்னார் மாவட்டத்தின் நுழைவாயிலில் அமைந்துள்ள இக் கட்டடத்தைஇராணுவத்தினர் கடந்த 12 வருடங்களாக பயன்படுத்தி வருகின்றனர்;

ஆனால் கூட்டுறவுச்சபைக்கு சொந்தமான இக்கட்டடத்துக்கு படையினர் இதுவரை வாடகைஎதனையும் செலுத்தவில்லை;

இதனால், அச்சபைக்கு பாரிய நட்டம்ஏற்பட்டுள்ளது எனவே கட்டடத்தை மீண்டும் சபையிடம் ஒப்படைக்க நடவடிக்கைஎடுக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது; (உ-8)

## எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு சகல மட்டங்களிலும் முன்னெடுப்பு

(ஈச்சமோட்டை)

எயிட்ஸ் நோய்பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ். மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் ரீ.ஆர்.ஆர்.ஓ. நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் இப் பணியில் 18 திட்டமிடல் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்விழிப்புணர்வு நிகழ்வுகள் விரிவுரைகள், ஒளிப்படங்கள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் சமூகத்தின் சகல பிரிவுகளிலும் மேற்கொள்ள நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது;

இந்நோயின் தாக்கத்தை எதிர்காலத்தில் கட்டுப்படுத்த விழிப்புணர்வுகுழுதிட்டஉத்தியோகத்தர்களுக்கு சகலரையும் ஒத்துழைப்புவழங்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ-59)

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு
# இரண்டாயிரத்து ஐந்நூறுபேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதிக்கடன் திட்டத்தின் கீழ் கடன் கொடுத்தவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட 2ஆயிரத்து 500பேரின் கடன், இம்மாதம் 21ஆம் திகதி யில் இருந்து 24ஆம் திகதி வரை தமிழீழ நிதித்துறை யினால் மீளளிக்கப்படவுள்ளதாக நிதிபொறுப்பாளர் யோ. தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார். மீளளிப்பு நடை முறைகள் வருமாறு,

1. அ) மீளளிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிற் கடன் சான்றிதழை வைத்திருப்பவர்களுக்கான மீளளிப்பு முதற்கட்டமாக நடைபெறும். நேரமும் மீளளிக்கப் படும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும்.
   ஆ) கடன் சான்றிதழைத் தவறவிட்டவர்களுக்கான மீளளிப்பு இரண்டாம் கட்டமாக நடைபெறும்.

இது தொடர்பான நடைமுறைகள் பின்னர் அறிவிக் கப்படும். இதனை கருத்திற்கொண்டு எம்முடன் ஒத்துழைக் குமாறு கடன் சான்றிதழைத் தவறவிட்டவர்களை வேண்டு கிறோம்.

2. கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகைதந்து கடனை மீளப்பெற வேண்டும்.
3. ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியி ருப்பின் இருவரும் வருகைதர வேண்டும்.
4. கடன்சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களைப் பின்னுரித்தாளர் கொண்டு வர வேண்டும்.
   அ) இறப்புச்சான்றிதழ்
   ஆ) இறப்புச்சான்றிதழின் படி (பிரதி)
   இ) கடன் சான்றிதழ்
   ஈ) பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்
   உ) பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப் படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்.
5. கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென் பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.
6. அ) மீளளிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சான்றிதழாளா தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்.
   ஆ) அடையாள ஆணவணம் அற்றவர் தமது புகைப் படத்தை (2.5 அங்.x 2.0 அங். அளவு) அதன் பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப் பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக் கொள்ளப்படும்.
   இ) இவ்வாறு செய்ய முடியாதவர்களுக்கான மீளளிப்புக்கடன் சான்றிதழைத் தவறவிட்டவர் களுக்கான இரண்டாம் கட்ட மீளளிப்பின் போது மேற்கொள்ளப்படும்.

இது பற்றிய நடைமுறை பின்னர் அறிவிக்கப்படும்.

பிரதேசரீதியாக மீளளிப்புக்குத் தெரிந்தெடுக்கப்பட் டவர்களின் பெயர்கள் வருமாறு.

## சங்கானை உதவி அரச அதிபர் பிரிவு

யா/ச/8 ஞானரத்தினம் பரமேஸ்வரன்
யா/ச/11 காத்திகேசு சதாசிவம்பிள்ளை
யா/ச/14 தம்பையா சேமஸ்கந்தசாமி இராசேந்திரம்
யா/ச/35 திருமதி. மகேஸ்வரி சுகுமாரன்
யா/ச/42 திருமதி. செல்லம்மா கிருஷ்ணன்
யா/ச/44 தம்பிநாதபிள்ளை சண்முகம் தம்பையா
யா/ச/57 திருமதி. சுலோசனா நவரத்தினராசா
யா/ச/60 கனகர் பலசிங்கம்
யா/ச/67 திருமதி. ஞானம்மா லோகீஸ்வரன்
யா/ச/92 செல்லத்துரை பத்மநாதன்
யா/ச/124 இராசரத்தினம் தர்மபாலன்
யா/ச/133 திருமதி. மகேஸ்வரி அருணாசலம்
யா/ச/136 திருமதி. கங்காதேவி தனபாலசிங்கம்
யா/ச/176 கனகர் பாலசிங்கம்
யா/ச/266 திருமதி. புவனேஸ்வரி அருச்சுனன்
யா/ச/277 திருமதி. இந்திராணி சோமஸ்கந்தன்
யா/ச/287 முருகேசு பேசன் சிறிரஞ்சன்
யா/ச/322 திருமதி. சறோஜினிதேவி சிவஞானரட்ணம்
யா/ச/349 பசுபதி யோகராசா
யா/ச/361 திருமதி. கமலாம்பாள் தெய்வேந்திரம்
யா/ச/378 நடராசா ஜெயகாந்தன்
யா/ச/381 திருமதி. இரத்தினம் சிவனேசன்
யா/ச/433 திருமதி. புஸ்பராணி ர்வீந்திரா
யா/ச/449 திருமதி. இராசலட்சுமி நடராசா
யா/ச/480 திருமதி. கமலாதேவி சண்முகலிங்கம்
யா/ச/511 திருமதி. புஸ்பராணி விவேகானந்தன்
யா/ச/578 செல்லப்பா குணரத்தினம்
யா/ச/580 சின்னையா தில்லையம்பலம்
யா/ச/602 திருமதி. பிறேமாவதி தெய்வேந்திரம்
யா/ச/708 திருமதி இரத்தினம்பாள் செல்லத்துரை
யா/ச/723 தாமோதரம்பிள்ளை இராசரத்தினம்
யா/ச/738 திருமதி. திருமலர் சிவபாலசுந்தரம்
யா/ச/749 திருமதி. இந்திராவதி ஞானசேகரம்
யா/ச/754 மார்க்கண்டு சக்திவேல்
யா/ச/759 திருமதி. சர்வேஸ்வரி பாலச்சந்திரன்
யா/ச/771 திருமதி. வசந்தமலர் விக்கினேஸ்வரன்
யா/ச/777 லீலாவதி தியாகராசா
யா/ச/785 திருமதி. கெங்காதேவி சண்முகநாதன்
யா/ச/793 திருமதி. சரஸ்வதி குலசேகரம்பிள்ளை
யா/ச/795 திருமதி. புஸ்பராணி குமாரசிங்கம்
யா/ச/801 திருமதி. தேவராணி பரமசிவம்
யா/ச/803 திருமதி. புவனேந்திரராணி தயாளன்
யா/ச/805 திருமதி சுசீலா செல்வராசா
யா/ச/810 பரஞ்சோதி கந்தையா
யா/ச/821 தம்பிப்பிள்ளை தங்கராஜா
யா/ச/855 அப்புக்குட்டி சண்முகநாதன்
யா/ச/867 அப்புத்துரை யோகராஜா
யா/ச/871 திருமதி. சரஸ்வதி கனகரத்தினம்
யா/ச/921 துஸ்யந்தினி கனகரத்தினம்
யா/ச/940 திருமதி. இராசமலர் இராசையா
யா/ச/990 திருமதி. இராசபூபதி சுப்பிரமணியம்
யா/ச/1051 சிதம்பரநாதன் சதானந்தன்
யா/ச/1054 முருகேசு சிதம்பரநாதன்
யா/ச/1056 கந்தையா ஜெகநாதன்
யா/ச/1072 வாசுகி நாகலிங்கம்
யா/ச/1096 சிவதேவி நவரட்ணம்
யா/ச/1127 நித்தியலட்சுமி பொன்னம்பலம்
யா/ச/1141 திருமதி. இராசேஸ்வரி சிவப்பிரகாசம்
யா/ச/1145 திருமதி பசுங்கிளிராணி மனோகரன்
யா/ச/1162 அண்ணாமலை செல்வராஜா
யா/ச/1184 திருமதி மனோன்மணி பாலேந்திரா
யா/ச/1223 முருகுப்பிள்ளை கதிரவேல்பிள்ளை
யா/ச/1302 கந்தசாமி கேதீஸ்வரன்
யா/ச/1327 சண்முகம் கதிரவேலு
யா/ச/1346 திருமதி பகவதிஅம்மா இராசரட்ணம்
யா/ச/1354 வேலுப்பிள்ளை சிவராசா
யா/ச/1452 செல்லத்துரை மகாதேவன்
யா/ச/1457 திருமதி. பாலேஸ்வரி இராமச்சந்திரன்
யா/ச/1495 வெற்றிவேலு தயாநாதன்
யா/ச/1508 சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
யா/ச/1520 திருமதி சுமதி சிவனேசன்
யா/ச/1585 திருமதி. வள்ளிநாயகி கனகரத்தினம்
யா/ச/1648 சண்முகம்பிள்ளை ஜெயானந்தம்
யா/ச/1739 சிவப்பிரகாசம் சிவகணேசசுந்தரன்
யா/ச/1849 தம்பு கணபதிப்பிள்ளை
யா/ச/1855 திருமதி அன்னபூரணம் இளையதம்பி
யா/ச/1861 சிவரஞ்சினி சுப்பிரமணியம்
யா/ச/1986 சிவவாகிதர் சிவயோகன்
யா/ச/2026 இரத்தினம் ஜெயரத்தினம்
யா/ச/2149 கார்த்திகேசு கதிர்காமநாதன்
யா/ச/2221 சண்முகம் வினாயகமூர்த்தி
யா/ச/2244 ஆசைப்பிள்ளை அருள்துரை
யா/ச/2261 வேலுப்பிள்ளை நடேசு
யா/ச/2264 திருமதி மங்களம் சமதக்கினி
யா/ச/2282 திருமதி. புனிதவதி சிவசுப்பிரமணியம்
யா/ச/2290 திருமதி. ஞானாம்பிகை வரதராசா
யா/ச/2299 நாகன் வீரபத்திரன்
யா/ச/2334 முத்து சங்கரப்பிள்ளை
யா/ச/2403 சோமசுந்தரம் சிவகுமாரன்
யா/ச/2435 முத்து தங்கராசா
யா/ச/2437 இராசேஸ்வரி கனகசபை
யா/ச/2464 கந்தசாமி சபாநாயகம்
யா/ச/2516 இராஜரட்ணம் முத்துச்சிவராஜா
யா/ச/2532 சிவசுப்பிரமணியம் சண்முகானந்தன்
யா/ச/2587 இராமநாதன் சிவராசா
யா/ச/2588 திருமதி. பரமேஸ்வரி சிவபாத சுந்தரம்
யா/ச/2641 வயிரவன் செபமாலை
யா/ச/2753 திருமதி நாகேஸ்வரி ஆறுமுகசாமி
யா/ச/2785 சிவாநந்தி பரமசிவம்
யா/ச/2917 பொன்னம்பலம் அப்புலிங்கம்
யா/ச/2960 திருமதி மனோரஞ்சிதமலர் இராசவல்லன்
யா/ச/3051 திருமதி கனகம் வேலும்மயிலும்
யா/ச/3064 திருமதி. அன்புமலர் ஜீவகாருண்யன்
யா/ச/3090 கதிரவேலு சந்திரராசா
யா/ச/3120 கந்தையா பத்மசாமி
யா/ச/3132 சடாச்சரசர்மா பத்மாநாதன்
யா/ச/3145 திருமதி தேவமலர் பாலசுப்பிரமணியம்
யா/ச/3161 முருகுப்பிள்ளை சச்சிதானந்தசிவம்
யா/ச/3189 நவரத்தினம் இளங்கோவன்
யா/ச/3205 கந்தையா வேலுப்பிள்ளை
யா/ச/3217 திருமதி. இன்பம் முருகானந்தசிவம்
யா/ச/3327 கந்தையா அம்பலவாணர்
யா/ச/3330 தருமலிங்கம் துரைலிங்கம்
யா/ச/3374 திருமதி. தனேஸ்வரி அரியரத்தினம்
யா/ச/3451 இராமலிங்கம் நடராசா
யா/ச/3616 நாகரத்தினம் சண்முகநாதன்
யா/ச/3665 கந்தஞானியர் ஞானசம்பந்தர்
யா/ச/3731 மருதப்பா பாலசிங்கம்
யா/ச/3777 திருமதி. வசந்தாதேவி தனசீலன்
யா/ச/3919 சிவகுரு சந்திரசேகரம்
யா/ச/3961 அரியலதா சிவப்பிரகாசம்
யா/ச/3971 விசுவலிங்கம் வரதராசா
யா/ச/3973 திருமதி. சுசிலகுமாரி சற்குணகுமார்
யா/ச/3988 மயில்வாகனம் சுதன்
யா/ச/4015 பெரியதம்பி தியாகராஜா
யா/ச/4106 சேனாதிராஜா செல்வராசா
யா/ச/4115 கந்தையா அருளானந்தம்
யா/ச/4187 தவச்செல்வி கனகரத்தினம்
யா/ச/4188 திருமதி. மனோரஞ்சிதம் தவத்துரை
யா/ச/4211 திருமதி பத்மினி இராஜசேகரம்
யா/ச/4220 முருகேசு சிதம்பரநாதன்
யா/ச/4250 நமசிவாயம் முருகநாதன்
யா/ச/4288 திருமதி. இராசாத்தியம்மா பாலசுப்பிரமணியம்
யா/ச/4369 திருமதி வடிவாம்பிகை சிவமுருகன்
யா/ச/4415 திருமதி. பத்மராணி அழகசுந்தரம்
யா/ச/4442 திருமதி சிதம்பரேஸ்வரி தர்மலிங்கம்
யா/ச/4472 கதிர்காமநாதன் பத்மசீலன்
யா/ச/4500 இளையதம்பி மகேஸ்வரன்
யா/ச/4538 சதாசிவம் நமசிவாயம்
யா/ச/4559 திருமதி. சந்திராவதி இன்பலோவன்
யா/ச/4567 சுப்பிரமணியம் பரமநாதன்
யா/ச/4571 திருமதி. பத்மவதனி நவரத்தினராசா
யா/ச/4605 திருமதி. நேசரத்தினம் கனகசபை
யா/ச/4623 திருமதி. பரமேஸ்வரியம்மா தர்மரத்தினம்
யா/ச/4664 ஆறுமுகம் மகாராசா

## கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

யா/கோ/12 வயித்திலிங்கம் பாலசுப்பிரமணியம்
யா/கோ/21 இரகுநாதர் குகமூர்த்தி
யா/கோ/29 சிவக்கொழுந்து கணபதிப்பிள்ளை
யா/கோ/31 செல்லையா குகானந்தன்
யா/கோ/38 ஆதிரெத்தினம் கிருஸ்ணராஜா
யா/கோ/114 திருமதி கலாநிதி சிவபாலன்
யா/கோ/124 செல்லத்துரை சிவுகுருநாதன்
யா/கோ/139 நவரத்தினம் சிவரூபன்
யா/கோ/149 செல்லையா தர்மலிங்கம்
யா/கோ/209 கந்தையா பூலோகநாதன்
யா/கோ/212 வேலுப்பிள்ளை இரத்தினம்
யா/கோ/254 இலட்சுமணர் குயலவநாதன்
யா/கோ/281 திருமதி. சந்திரலீலா சிவராசா
யா/கோ/301 ரஜனி நடராஜா
யா/கோ/363 திருநாவுக்கரசு கமலநாதன்
யா/கோ/369 வயிரவநாதன் கணபதிப்பிள்ளை
யா/கோ/375 தம்பையா கந்தசாமி
யா/கோ/472 திருமதி. செங்கமலர் பாலசிங்கம்
யா/கோ/493 மூத்ததம்பி தவரத்தினம்
யா/கோ/506 திருமதி. தர்மகௌளரி சிவகணேசன்
யா/கோ/536 கந்தையா குமரகுருபரன்
யா/கோ/678 திருமதி மஞ்சுளா ரவீந்திரன்
யா/கோ/778 ஆழ்வார் சிவகுரு
யா/கோ/784 நாரயணபிள்ளை சுப்பிரமணியம்
யா/கோ/816 திருமதி தயாநிதி தம்பிராசா
யா/கோ/842 திருமதி கோணேஸ்வரி தம்பிப்பிள்ளை
யா/கோ/845 குமரேசு தெய்வேந்திரம்
யா/கோ/901 பொன்னையா கந்தையா
யா/கோ/902 நவரத்தினம் குலசேகரம்
யா/கோ/906 வேலுப்பிள்ளை கிருஸ்ணமூர்த்தி
யா/கோ/920 மகேஸ்வரி கந்தையாப்பிள்ளை
யா/கோ/925 நாகலிங்கம் நாகராசா
யா/கோ/936 கணபதிப்பிள்ளை நடராஜா
யா/கோ/1026 கார்த்திகேசு உதயகுமார்
யா/கோ/1053 திருமதி. கோணேஸ்வரி யோகநாதன்
யா/கோ/1107 யோசெப் ஆசீர்வாதம்
யா/கோ/1158 திருமதி. குசலகுமாரி ஜீவநாதன்
யா/கோ/1253 திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம்
யா/கோ/1423 சின்னத்தம்பி கார்த்திகேசு திருச்செல்வம்
யா/கோ/1452 பாலு திலகராசா
யா/கோ/1492 திருமதி யோகமணி சுப்பிரமணியம்
யா/கோ/1574 கந்தையா இராசதுரை
யா/கோ/1714 கணபதிப்பிள்ளை இராசலிங்கம்
யா/கோ/1772 திருமதி தனயோகம் ஆறுமுகவடிவேல்
யா/கோ/1785 திருமதி. வசந்தரமணி சச்சிதானந்தம்
யா/கோ/1796 திருமதி இந்திரவதனா பரமலிங்கம்
யா/கோ/1833 கதிரவேலு மகேந்திரன்
யா/கோ/1846 மயில்வாகனம் மகேஸ்வரன்
யா/கோ/1864 திருமதி பாலேஸ்வரி செல்வராசா
யா/கோ/1977 அமிர்தலிங்கம் அமிர்தவாசர்
யா/கோ/1988 தியாகராசா பாலசுப்பிரமணியம்
யா/கோ/1994 திருமதி ஈஸ்வரி ஸ்ரீரதன்
யா/கோ/2081 திருமதி பரமேஸ்வரி சோதிநாதன்
யா/கோ/2084 திருமதி ஸ்ரீபதிஅம்பாள் பொன்னுத்துரை
யா/கோ/2201 திருமதி தவமணிதேவி இராசரெத்தினம்
யா/கோ/2438 கந்தையா திருநாவுக்கரசுராசா
யா/கோ/2579 திருவிளங்கம் பாலச்சந்திரன்
யா/கோ/2625 வைத்திலிங்கம் கமலநாதன்
யா/கோ/2642 கலாபதி செல்லத்துரை
யா/கோ/2649 திருமதி. மனோன்மணி இரட்ணசபாபதி
யா/கோ/2665 சபாரத்தினம் மனோகரன்
யா/கோ/2779 சரவணமுத்து சதாசிவம்
யா/கோ/2794 திருமதி. செல்வரட்ணம் அருச்சுனன்
யா/கோ/2852 கந்தையா தர்மலிங்கம்
யா/கோ/2897 பொன்னம்பலம் இரவிமன்னன்
யா/கோ/2938 திருமதி. சர்வேஸ்வரி பரமசாமி
யா/கோ/2964 கந்தசாமி சண்முகநாதன்
யா/கோ/2970 திருமதி சிவபாக்கியம் நடராசா
யா/கோ/2984 கதிரேசு செல்லையா
யா/கோ/3080 கந்தையா குழந்தைவேலு
யா/கோ/3206 திருமதி.தங்கராணி சோமசுந்தரம்
யா/கோ/3236 கந்தப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
யா/கோ/3248 திருமதி.சாந்தலட்சுமி துரைசிங்கம்
யா/கோ/3402 சின்னத்தம்பி இராசானந்தம்
யா/கோ/3425 திருமதி. சதிலீலாவதி உருத்திரா
யா/கோ/3449 திருமதி. சுமித்திரா சற்குணநாதன்
யா/கோ/3531 திருமதி. யோகமலர் பாலசிங்கம்
யா/கோ/3625 திருமதி. இரஞ்சிதமலர் விமலேந்திரன
யா/கோ/3638 இராசதுரை சிறிபாலேஸ்வரன்
யா/கோ/3644 சிவயோகமலர் துரைஐயா
யா/கோ/3651 திருமதி. சிவபாக்கியம்சேனாதிபதி
யா/கோ/3684 சின்னத்தம்பி தவநாயகம்
யா/கோ/3829 பத்மநாதன் மகேசன்
யா/கோ/3900 நல்லதம்பி இராமலிங்கம்
யா/கோ/3955 திருமதி. சுசீலாதேவி அருணகிரிநாதன்
யா/கோ/3981 திருமதி. தேவராணி கேதாரலிங்கம்
யா/கோ/4121 திருமதி. வசந்தரூபி சுந்தரரேஸ்வரன்
யா/கோ/4164 கதிர்காமு கந்தையா
யா/கோ/4290 திருமதி சிவபாக்கியம் தியாகராசா
யா/கோ/4322 வல்லிபுரம் ஸ்ரீஸ்கந்தராசா
யா/கோ/4362 வேலுப்பிள்ளைகதிர்காமு விக்கினேஸ்வரன
யா/கோ/4428 திருமதி.சிவராணி பரலோகநாதன்
யா/கோ/4471 முருகேசு வேலும்மயிலும்
யா/கோ/4474 திருமதி.யோகேஸ்வரி கந்தசாமி
யா/கோ/4497 நடேசு பத்மநாதன்
யா/கோ/4561 திருமதி.சந்திரமலர் சதாசிவம்
யா/கோ/4839 திருமதி.தெய்வானை அப்பையா
யா/கோ/4855 திருமதி தனலட்சுமி அம்மா இளையதம்பி
யா/கோ/4859 நடராசா திசைவீரசிங்கம்
யா/கோ/4877 திருமதி. யோகராணி பாலேந்திரன்
யா/கோ/4880 திருமதி. இராசமணி பாலச்சந்திரன்
யா/கோ/4958 தம்பிப்பிள்ளை கந்தையா
யா/கோ/4987 திருமதி.அழகம்மா செல்லத்துரை
யா/கோ/5061 பொன்னையா பாலசுப்பிரமணியம்
யா/கோ/5160 திருமதி. பராசக்தி நாகரத்தினம்
யா/கோ/5189 திருமதி. ஸ்கந்தராணி இரத்தினகுமார்
யா/கோ/5342 மயில்வாகனம் மகாலிங்கம்
யா/கோ/5351 திருமதி மனோறஞ்சினி மகேந்திரன்
யா/கோ/5353 ஆறுமுகம் மாணிக்கராசா
யா/கோ/5492 வேலாயுதபிள்ளை ஞானேந்திரன்
யா/கோ/5499 திருமதி. செல்வமணி பஞ்சலிங்கம்
யா/கோ/5600 சீனி செல்லத்துரை
யா/கோ/5764 கதிர்காமு லோகராசா
யா/கோ/5823 மயில்வாகனம் இராசநாயகம்
யா/கோ/5871 கேனாதிராசா தர்மலிங்கம்
யா/கோ/5997 திருமதி அன்னம்மா குமாரவேலு
யா/கோ/6043 திருமதி. பராசக்தி மாணிக்கவாசகர்
யா/கோ/6123 திருமதி இராஜேஸ்வரி வினாசித்தம்பி
யா/கோ/6158 சபாரட்ணம் சிவகுருநாதன்
யா/கோ/6161 சபாபதி சிவபாலன்
யா/கோ/6202 திருமதி. சத்தியேஸ்வரி யோகராசா
யா/கோ/6237 இரத்தினம் பஞ்சரத்தினம்
யா/கோ/6261 கார்த்திகேசு திருநாவுக்கரசு
யா/கோ/6315 திருமதி. தவமணி சோமசுந்தரம்
யா/கோ/6331 திருமதி. இராசலட்சுமி பழனித்துரை
யா/கோ/6343 சண்முகம் ஜெயானந்தம்
யா/கோ/6376 திருமதி. ஞானசக்தி நவரட்ணம்
யா/கோ/6458 திருமதி. விஜயலக்சுமி பஞ்சலிங்கம்

**மீளளிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனைய பிரதேசத்தவர்களின் பெயர்கள் தொடர்ந்து வெளிவரும்.**

# எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க 'ஒபேக்' அமைப்பு தீர்மானம்

## உலகச் சந்தையில் விலை வீழ்ச்சி ஏற்படலாம்

(இலண்டன்)

உலக நாடுகளில் மசகு எண்ணெய்க்கான கேள்வி அதிகரித்துள்ளதையடுத்து மசகு எண்ணெய் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கான தீர்மானம் ஒன்றை எண்ணெய் உற்பத்தி நாடுகளின் அமைப்பான ஒபேக் மேற் கொண்டுள்ளது.

மசகு எண்ணெய் உற்பத்தி அதிகரிக்கும் போது உலக சந்தையில் எண்ணெயின் விலை வீழ்ச்சியடையலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.

லண்டன் நகரில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஒபெக் நாடுகளின் முக்கியபிரதிநிதிகளிற்கான விஷேட கூட்டம் ஒன்றிலேயே உற்பத்தியை அதிகரிக்கும் அத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை உலகநாடுகளின் மசகு எண்ணெய் பாவனை அதிகரித்து வருவதனால் எண்ணெய்விநியோகத்தில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (02)

### கிளர்ச்சியாளர் குண்டுக்கு ஒருவர் பலி

(காத்மாண்டு)

நேபாளத்தில் மாவோ கிளர்ச்சிவாதிகள் குண்டொன்றை வெடிக்கச் செய்ததில் ஒருவர் உடனடியாகப் பலியானதுடன், மற்றும் இருவர் படுகாயமடைந்தனர்.

நேபாளத் தலைநகரான காத்மாண்டுக்கு 40 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள நகரொன்றில் அரச தொலைத் தொடர்புக் கோபுரத்திற்கருகில் நேற்று இக்குண்டு வெடித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (4)

# உலக தரிசனம்

## ஒஸாமா பின்லேடன் சாகவில்லை இன்னும் உயிருடனிருக்கிறார்

### கனேடிய புலனாய்வு தலைவர் வெளியிடும் தகவல்

(ஒட்டாவா)

சர்வதேச பயங்கரவாதியான ஒஸாமா பின்லேடன் இன்னும் உயிருடனே இருப்பதாக கனேடிய புலனாய்வு அமைப்பின் தலைவர் சந்தேகம் தெரிவித்துள்ளார்.

ஒஸாமா பின்லேடன் உயிருடன் இல்லையென அல்கெய்தா அமைப்பின் உறுப்பினர்கள் தெரிவித்து வரும் தகவல் நம்பமுடியாத ஒன்றெனவும் கடந்த சிலகாலங்களில் பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த பாரிய பயங்கரவாத தாக்குதல்களின் பின்னணியில் ஒஸாமா பின்லேடன் இருந்துவந்துள்ளாரெனவும் கனேடிய புலனாய்வு அமைப்பின் தலைவர் வாட் எல்றோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை அல்கெய்தா அமைப்பு தலைவர் இல்லாத நிலையில் செயற்பட்டுவருமாயின் பலநாடுகள் பயங்கரவாதத்தின் பாரதூரமான அச்சுறுத்தல்களிற்கு உட்படவேண்டிய ஓர் நிலை ஏற்பட்டுவிடுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (02)

### சமாதான நாடுகள் பட்டியலில் இடம்பெற

## வடகொரியா யுரேனிய சுத்திகரிப்பை விடவேண்டும்

### ஜோர்ஜ் புஷ் கண்டிப்பு

(நியூயோர்க்)

சமாதான நாடுகளின் பட்டியலில் வடகொரியா இடம்பெற விரும்பினால் அது யுரேனிய சுத்திகரிப்பு திட்டத்தை உடனடியாக கைவிடவேண்டும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சந்தித்து பேசப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடகொரியா தனது அணு ஆயுத திட்டங்களை உடனடியாக கைவிடவேண்டுமென ஜப்பான், தென்கொரியா மற்றும் மத்திய உலக நாடுகளுடன் கூட்டாக இணைந்து அமெரிக்கா கோரிக்கை விடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (2)

### தொலைக்காட்சி தொழில்நுட்பம்

## உலககோப்பை போட்டியில் மட்டுப்படுத்தப்படும்

(லண்டன்)

2003-ம் ஆண்டுநடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக கோப்பை கிரிக்கெட்போட்டில் நடுவர்களிற்கு உதவியாக தொலைகாட்சித்தொழில் நுட்பம் உபயோகபடுத்தப்படமாட்டாது என்று ஐ.பி.சி கிரிக்கெட்சபையின் தலைமை நிர்வாகி அறிவித்துள்ளார்.

பரவுண்டரி விக்கெற்.ரண் அவுட் ஆகிய மிக முக்கியமான நிலைகளை தெளிவுபடுத்துவதற்காக மட்டும் பயன்படுத்தலாம் எனவும், தொடர்ச்சியாக தொலைக்காட்சி தொழில்நுட்பத்தை பயன்படுத்தகூடாதெனவும் அறிவுறுத்தியுள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது. (02)

### 'ஈராக்' தொடர்பான

# யு. எஸ். நகல் தீர்மானம்: பிரான்ஸ், ரஷ்யா ஆதரவு?

(வாஷிங்டன்)

ஈராக்மீதான அமெரிக்காவின் தீர்மானத்திற்கு பிரான்சும், ரஷ்யாவும் ஆதரவுவழங்கும்என நம்பப்படுகின்றது.

ஐக்கியநாடுகள் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள அமெரிக்காவின் இத்தீர்மானத்திற்கான நகல் பிரேரணை மீண்டும் அமெரிக்காவால் தயாரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

கடந்த 2 மாதங்களாக ஐக்கியநாடுகள் சபைக்கும், அமெரிக்காவிற்கும் இடையில் இழுபறிநிலையில் இருந்துவந்த இந்நகலை இன்று ஐக்கியநாடுகள்சபை ஏற்றுக் கொள்ளும்என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரான்சும், ரஷ்யாவும் தமது அதிகாரத்தைக் கொண்டு இத்தீர்மானத்தை நேரடியாகத் தடுக்காது விடினும் ஏதேட்சையாக ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்காதவகையில் இத்தீர்மானம் அமையும்எனவும் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் சில கருத்துக்களில் பிரான்சும் ரஷ்யாவும் திருப்தியடையவில்லையென்று தெரிகிறது.

ஐக்கியநாடுகள் சபையின் நிரந்தர உறுப்பினர்களான 5 நாடுகளும் ஆதரிக்காவிட்டாலும், ஏனைய நாடுகளில் 9 நாடுகள்மட்டும் ஆதரித்தால் தீர்மானம் நிறைவேற்றப்படும்என அமெரிக்க அதிபர் புஷ் கூறியுள்ளார்.

இதேவேளை, ஐக்கியநாடுகள் சபையின் கருத்துக்களை மீறும் நிலைக்கு அமெரிக்கா வந்துவிட்டதாக அரசியல் ஆய்வாளர்கள் கருந்து தெரிவித்துள்ளனர். (4)

## ரஷ்யாவில் வாந்திபேதி பெருமளவு சிறுவர்பாதிப்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவின் தென்பகுதியில் தீவிரமாக பரவிவரும் வாந்திபேதியினால் சுமார் 400 பேர் வரை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் உட்கொண்ட உணவின் மூலமே இந்நோய் பரவியுள்ளதெனவும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்கள் என்றும் ரஷ்ய சுகாதார பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இதன் காரணமாக சம்பந்தப்பட்ட உணவை தயாரிக்கும் நிறுவனத்தின் உற்பத்தி முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது எனவும் இந் நிறுவனத்தின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் ரஷ்ய சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (02)

## விமானவிபத்தில் 17பேர்பலி

(பெர்லின்)

ஜெர்மனியின்பெர்லின்நகரில் இருந்து லக்சம் பேர்க்நோக்கி சென்ற பயணிகள் விமானம் ஒன்று தரையிறங்கும் போது ஏற்பட்ட விபத்தில் 17 பேர் உயிரிழந்ததுடன் 5 பேர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்விபத்து குறித்து தீவிர விசாரணைகள் மேற்கொண்டு வரும் ஜெர்மன் பொலிஸார் காயமடைந்துள்ள 5 பேரினதும் நிலை கவலைக் கிடமாக உள்ளதென தெரிவித்துள்ளனர். (02)

## யு. எஸ், பிரி. தீர்மானம் ஈராக்அதிபர்கடும்ஆட்சேபம்

(பக்தாத்)

ஈராக் ஆயுதக்களைவை உறுதிப்படுத்தும் நோக்கில்ஐக்கிய நாடுகள் பேரவையில் அமெரிக்காவும், பிரிட்டனும் கூட்டாகச் சமர்ப்பித்ததீர்மானத்திற்கு ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசைன் கடுங்கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஈராக் ஆயுதக்களைவை மேற்கொள்ளும் ஐக்கிய நாடுகள் பாதுகாபபு ஆயுதப்பரிசோதகர்களுகுசதாம்ஹுசைனின் மாளிகையுட்பட அனைத்து இடங்களையும்பரிசோதிக்கும் அதிகாரத்தைஇத்தீர்மானம் வழங்குகின்றது.

இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் அமெரிக்கா மற்றும் பிரிட்டன்தலைவர்கள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளவும்.

உலகில் புதிய சட்டமொன்றை தோற்றுவிக்கவும் முயல்கிறார்கள் என்று ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசைன் கண்டனம் தெரிவித்துள்ளதாக ஈராக் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது. (4)

### போதைப்பொருளுக்கு பதிலாக

## கொலம்பியா ஆயுதப் பரிமாற்றம் செய்கிறது

### யு. எஸ். புலனாய்வில் கண்டுபிடிப்பு

(நியூயோர்க்)

கொலம்பியா போதைப் பொருட்களிற்கு பதிலாக ஆயுதங்களை பரிமாற்றி கொள்கின்றது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொலம்பியாவில் நீண்டகாலம் மறைமுகமாக மேற்கொள்ளப்பட்டுவந்த போதைப் பொருள் பண்டமாற்று விநியோகம் தற்போது ஆயுதப்பரிமாற்றமாகஉருவெடுத்துள்ளதென அமெரிக்கமத்திய புலனாய்வு பிரிவினரும், போதைப்பொருள் தடுப்புபிரிவினரும் இணைந்து மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நடவடிக்கை தொடர்பாக 4 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர், (02)

# தாய்வானை மீண்டும்பேச்சுக்கு அழைக்கிறார் சீனத் தலைவர்

(பெல்ஜிங்)

சீனாவும் தாய்வானும் தமக்கிடையேயான அரசியல் பேதங்களை மறந்து மீண்டும் பேச்சுவார்த்தைகளை தொடரவேண்டுமென சீனா கம்யூனிஸ்ட்கட்சியின் தலைவர் ஜியாங் செமின் வலியுறுத்தியுள்ளாரென தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 1949 ஆம் ஆண்டு முதல் தாய்வான் சுயஆட்சி முறையில் இயங்கிவருகின்றது. எனினும் அதுசீனாவிற்கு உரியது என்றும் தான் விரும்பினால் பலத்தை பிரயோகித்துதாய்வானை சீனாவுடன் இணைத்துக்கொள்ளமுடியும் என்று சீனா கூறிவந்துள்ளது.

இதேவேளை தற்போது சீனா தாய்வானை பேச்சுவார்த்தைக்கு வரும்படி அழைத்துள்ளதுடன் இருநாடுகளுக்குமிடையிலான பேதங்களை மறந்துவிடவேண்டுமென்றும் அறிவித்துள்ளது. (2)

எவ்வ துறைவது உலகம்
உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு
குறள்

# வலம்புரி

## ஆய்வுகூடத் தவளைகள்

ஆய்வுகூடங்களில் உடலியல் கல்விக்காகத் தவளைகளை வெட்டிப் பரிசோதிப்பது வழக்கம். மனிதர்கள் படிப்பதற்காக தவளைகள் மாண்டு போவது நியதி. படித்தவர்கள் தவளைக்குச் சிகிச்சை செய்வது கிடையாது. தமது நலனுக்காக தவளையை வெட்டிப் பரிசோதிக்கின்றனர் அவ்வளவுதான்.

இதேநிலை இப்போது ஈழத்தமிழர்களின் தாயகமான வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இடம் பெறுகின்றது. வெளிநாட்டுத் தூதுக்குழுக்கள் யுத்தத்தால் பாதிப்பு அடைந்த வடக்குக்கிழக்கு மாகாணங்களுக்கு வருகை தருகின்றனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில்சென்று பார்வையிடுகின்றனர். பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துப் பேட்டி காண்கின்றனர்.

அவர்களின் வசதி படைத்த கண்களுக்குத் தமிழர்கள் வக்கற்றவர்களாகத் தெரிகின்றனர். யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்கள், உளத்தாக்கங்கள், கண்ணிவெடிப் பிரச்சினைகள், மீளக்குடியமர்தல், அகதிமுகாம் வாழ்க்கை இப்படி ஒவ்வொரு கோணங்களில் வெளிநாட்டுத் தூதுக் குழுவினர் ஆய்வுசெய்கின்றனர்.

வெள்ளைத் தோலைக் கண்டவுடன் ஏதோதர வருகின்றனர் என்ற ஆவலுடன் வந்தவர்களைச் சுற்றி நின்று சம்பாசனை நடத்துகின்றோம். வந்தவர்கள் ஏதோ - எழுதிக் கொண்டார்கள் அவ்வளவுதான்.

ஏன்வந்தார்கள், என்ன தந்தார்கள், என்றால் எதுவுமேயில்லை. ஆக அவர்கள் வந்ததன் நோக்கம் வேறு, ஈழத்தமிழர்கள் ஆய்வுகூடத் தவளைகளாக அவர்களுக்குக் காட்சியளிக்கின்றார்கள்.

அவர்கள் ஆய்வாளர்கள் யுத்தத்தின் தாக்கம் எப்படியிருக்கிறது. அப்படியொரு நிலைமை தத்தம் நாடுகளில் ஏற்பட்டால் தாம் முன்னேற்பாடாகச் செய்யவேண்டியவை எவைஎன்ற விடயங்களை தவளைகளிடம் சோதித்தறிய வருகின்றார்கள். அவ்வளவுதான். வருகின்றவர்கள் எல்லோரிடமும் கையேந்தி உதவி கேட்க வேண்டுமென்ற இழிநிலை என்றுஇல்லாமலபோகின்றதோ அன்று ஆய்வாளர்களின் வருகையும் நின்றுபோகும்.

# தொன்மை ஆலயத்து நிலையைத் தெளிவாக்கும் நூல் மாதாஜியின் 'திருக்கேதீஸ்வரம்'(சிறு குறிப்பு)

## திறனாய்வுக் களம்

**சிவ. சண்முகவடிவேல்**

திருக்கேதீச்சரம் தொன்மையான சிறப்புக்கொண்டது மாந்தை, மாதோட்ட நன்னகரம், கேதீச்சரம், பாலாவி என்று தனித்தனியான ஆராய்வுகளுக்கும் அகழ்வாராய்ச்சிக்கும் உரியது திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாராலும் சுந்தர மூர்த்தி நாயனாராலும் தனித் தனியான திருப்பதிகங்களாக நற்றமிழ் நவிலப் பெற்றன. திருநாவுக்கரசு நாயனாரால் வைப்புத் தலமாக வாழ்த்தப்பெற்றது.

திருக்கேதீஸ்வரம் (சிறு குறிப்பு,) என்னும் நூலில் மேற்கூறிய விளக்கமின்மையை விளப்பு முகமாகவே 'சிறு குறிப்பு' என்னும் வார்த்தைப் பிரயோகம் இடம்பெற்றது போலும்.

### மாதாஜியின் மனக்கவலை

ஏழாலை, குப்பிளான் மாதாஜி 1964 ஆம் ஆண்டு தொடக்கம் 1991ஆம் ஆண்டு வரையும் திருக்கேதீச்சரம் சென்று எம் பெருமானைத் தரிசிக்கத் தவறுவதில்லை' 1991 ஆம் ஆண்டிலிருந்து 13 ஆண்டுக்காலம் திருக்கேதீச்சரத் திருக்கோவில் பூட்டப்பட்டிருந்தமையும் அபிடேகம் பூசை நிகழாமையும் மாதாஜியின் மனத்தில் பெருங்குறை. 11.3.2002 ஆம் ஆண்டில் ஆலயத்தைச் சென்றுபார்வையிட்ட காட்சி அவருடைய மனக்குறையை மேலும் வளர்ப்பது போலாயிற்று. அந்நாளில் திருக்கோவிலும் ஆலயச் சூழலும் பாதிக்கப்பட்டிருந்தமை அம்மையாருடைய மனத்தில் தீராத மனக்கிலேசத்தை உருவாக்கிவிட்டது போலும்.

### திருக்கேதீஸ்வரம்(சிறுகுறிப்பு)

அலை மோதும் உள்ளத்தை அமைதிப்படுத்தவும், கௌரி அம்பாள் சமேத கேதீச்சரப் பெருமானுடைய அடியவர்களுக்கு உண்மையை எடுத்துரைக்கு முகமாகவுமே திருக்கேதீஸ்வரம் (சிறுகுறிப்பு) எனனும் கைந்நூல் அவரால் வரையப் பெற்றுள்ளது, திருக்கேதீச்சரம் இன்று இருக்கும் நிலை கவலையைத்தருவதால் எப்படியாயினும் ஒரு சிலர் மனையில் இச் சிறு நூல்தவழ வேண்டும், வளாந்துவரும் சிறார்கள்இந்நூலை வாசித்து எமது,நாட்டின பாடல்பெற்ற இத்தலத்தைஅறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கம் அவருடையது முற்றிப்பழுத்த சைவக் கனியின் சிந்தனை ஒழுக்குச் சாற்றினைத் துய்ப்பதற்கு ஒவ்வொருவருடைய கரங்களிலும் திருக்கேதீஸ்வரம் (சிறுகுறிப்பு) நூல்திகழ வேண்டும்,

### பயனுள்ள உண்மைகள்

நூலை ஒருதரம் படித்தால் பயனுள்ள பல உண்மைகளை உணரலாம்.

வேத காலம், இராவணன் காலம், சோழர் காலம் பூர்வீக ஈழகாலம், ஆங்கிலேயர் காலம் ஆறுமுக நாவலர் காலங்களோடு இணைத்து திருக்கேதீச் சரத்தின் பெருமையையும் அருமையையும் ஊரறிய முயன்றமை நன்கு புலனாகும்.

வரலாற்றுப் பின்னணியோடு ஈழச் சைவத்தின் வாழ்வு தாழ்வுகளையும் சைவத்தை வாழ்விக்க வேண்டிய வழி வகைகளையும் வகுத்துக் காட்டியுள்ளார்.

அம்மையார் குறிப்பிட்டது போல சைவர்களின் மனைகள் தோறும்ஒளி ஏற்றும் திருக்கேதீஸ்வரம் என்னும் நூல்.

எளிய நடை, இனியதமிழ், இலகுவான வசனம், அதனால் தங்கு தடை இன்றி எவரும் படித்தறிய நல்ல வாய்ப்பு.

முடிவுரைக்கு முன்னதாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் மார்க்கங்களை உணர்த்தும், திருவாதவூரடிகள் புராணப் பாடலையும், யான் எனது என்னும் அகங்கார மமகாரங்களை அறுக்கும் வழிகளை உணர்ந்தும் பாடலையும் சேர்த்துள்ளார். அது திருக்கேதீஸ்வர வழிபாட்டில் ஒழுக வேண்டிய முறைகளை மறவாதிருக்கும் பொருட்டேயாகும்.

முடிவுரைக்குப் பின்னர் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் சுந்தரமூர்த்திநாயனார் அருளிய திருக்கேதீச்சரத் திருப்பதிகங்களை இணைத்திருப்பது வரவேற்க வேண்டிதொன்று.

### அனுபவப்பாடல்

மாதாஜி அம்மையார், கேதீச்சரநாதன் வேண்டுவார் வேண்டுவதை வழங்குவார் என்பதற்குத் தமது அனுபவத்தையும் தாம்பாடியபாடலில் வெளிப்படுத்தியுள்ளார். 1964 ஆம் ஆண்டில் ஆக்கப் பெற்றது அப்பாடல்.

திருக்கேதீஸ்வரம் திருக்கோவிலின் எடுப்பான முகப்புக் கோபுரமும், ஆலாட்சி மணியும் யாரையும் ஈர்க்கவல்லன இதனால்சைவப்பொதுமக்கள் திருக்கேதீஸ்வரம் (சிறு குறிப்பு) நூலைத் தேடிவாங்குவதில் சிரத்தை காட்டுவார்கள் என்பதற்கு ஐயமில்லை. ''இச்சிறுநூலின் வருமானம் திருக்கேதீஸ்வரத் திருப்பணியில் சேர்க்கப்படும்'' என்று ஒருவார்த்தை முன்னுரையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. நூலினைவாங்கிக்கொள்பவர்களைச் சிவபுண்ணியத்திற்கு உரித்துள்ளவர்களாக்கிவிட வேண்டும் என்பதில் அம்மையாரின் வேணவாதான் என்னே! ''பாம்பணிசெய்ய வேணிப்பரம்பரன் அடியார் கையில் ஆம் பொருள் நமதேயானால் அறம் பிறர்க்காவதுண்டோ!''

நூலின் பெயர்- திருக்கேதீஸ்வரம் (சிறு குறிப்பு)
ஆசிரியர்- புலவர் ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி
வெளியீடு- மாதாஜி
விலை- ரூபா 50/=

---

யாழ். மாவட்ட அணி

## கொழும்பு பயணம்

(ஈச்சமோட்டை)

இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்படும் தேசிய மெய்வன்மைப் போட்டியில் கலந்து கொள்வதற்காக, யாழ் மாவட்ட அணியொன்று கொழும்பு சென்றுள்ளது.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இன்று இப்போட்டிகள் ஆரம்பமாகின்றன.

ஒரு தசாப்த இடைவெளிக்குப் பின்னர் ஏ-9 தரைப்பாதை ஊடாக யாழ். அணியொன்று கொழும்பு செல்வது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-59)

## நாகர்கோவில் பகுதியில் குடியமர அனுமதி மறுப்பு

(தென்மராட்சி)

நாகர்கோவில் கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகியகிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்து 200 மீனவ குடும்பங்களும் 200 விவசாயக் குடும்பங்களும் தமதுசொந்தக் கிராமங்களில் மீளக்குடியமர இன்னமும் அனுமதிக்கப்படாதநிலையில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இக்குடும்பங்களைத் தமது இருப்பிடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கும்படி பல அமைப்புக்கள் கோரிக்கைகள விட்டிருந்த போதிலும்கூட, பாதுகாப்புக் காரணங்களை கருத்தில்கொண்டு மீள்குடியமர அனுமதி வழங்கமுடியாதிருப்பதாக பாதுகாப்பு தரப்பினரால் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொழில் வாய்ப்புகள், வருமானங்கள் இல்லாதநிலையில் அரசினால் வழங்கப்படும் உலர்உணவு நிவாரணத்திலேயே இக் குடும்பங்கள் தங்கியிருக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. (உ-77)

## வரவு செலவுத்திட்டத்திற்கு சம்பந்தன் வரவேற்பு

(கொழும்பு)

நாட்டில் சமாதானம் ஏற்படாமல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. இரண்டும்சம நேரத்தில் இடம்பெறவேண்டும் என்பதை இந்த வரவு செலவுத்திட்டம் எடுத்துக் காட்டுவதாக உள்ளது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு திருமலை மாவட்ட எம். பியுமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் நிதியமைச்சர் கே.என். சொக்ஸியினால் கடந்த புதனன்று பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த வரவு செலவுத் திட்டம் தொடர்பாக இரா. சம்பந்தன் மேலும் தெரிவித்திருப்பதாவது:

நாட்டில் சமாதானத்தை நாம் கட்டியெழுப்புவதற்கு வசதியாக யுத்தம் நிறுத்தப்பட்டு விட்டது. இதன் மூலம் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பும் வகையில் இந்த வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு இருப்பதனால் இந்த வரவு செலவுத் திட்டப் போக்கினை நாம்வரவேற்கிறோம் என்று கூறியுள்ளார்.

புளொட் அமைப்பின்தலைவரும் வன்னி மாவட்ட எம். பியுமான தர்மலிங்கம் சித்தார்த்தன் இந்தவரவு செலவுத்திட்டம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையில்;

நாட்டில் சமாதானம் மலராமல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. சமாதான முயற்சிகளை அரசு மேற்கொண்டுவரும் நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த வரவு செலவுத்திட்டம் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் எனத் தெரிவித்துள்ளார். (ம)

---

## தினசரி தியானம்

### ஒட்டுவது

மாயையின் முதற் குழந்தை பற்று. அதுதான் மனத்தை உலகப் பொருளோடு ஒட்டவைப்பது. மனத்தில் பசை, பலாப்பிசின் மற்றும் பற்றிக் கொள்கின்ற பொருள்களைப் போல ஒட்டிக் கொள்ளும் பொருள்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்து எச்சரிக்கையாக இருங்கள். உலகத்தில் உள்ள பொருள்களோடுமனம்ஒட்டிக் கொள்கிறது. என்வீடு, என் சொத்து என்றெல்லாம் ஒரு போதும் சொல்லாதீர்கள். உண்மையைப் பயன் படுத்துவதிலும் பற்றற்ற தன்மையை வளர்த்துக்கொள்வதிலும் எச்சரிக்கையாக இருங்கள்.

சுவாமி சிவானந்தர்

# தலைவர் பிரபாவுக்கு விதித்த தீர்ப்பை நீதிமன்றம் வாபஸ் பெறவேண்டும்

## பேரணியின் முடிவில் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சிறில் உரை

(அலுவலக நிரபர்)

**தமிழினம் போற்றும் தங்கத் தலைவர் வே. பிரபாகரனுக்கு மேல் நீதிமன்றம் வழங்கிய 200வருட கடூழியச் சிறைத்தண்டனையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.**

**இவ்வாறு யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன்சிறில் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைக் கண்டித்து நேற்று யாழ் குடாநாட்டில் மாபெரும் கண்டனப் பேரணி இடம்பெற்றது.

இப்பேரணி முடிவில் யாழ் அரச செயலகத்தில் மகஜர் கையளிப்புக் கூட்டம் இடம் பெற்றது.

இக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:- யுத்தம் ஓய்ந்து நாட்டில் சமாதான முயற்சிகள் நகர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், விடுதலைப்புலிகளின் தலைவருக்கு எதிராக தீர்ப்பு வெளியாகியுள்ளது. அதுவும் 200வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை. இதனை எண்ணும் போது அழுவதா சிரிப்பதா என்று புரியவில்லை.

நாம் நீதி மன்றத்தை மதிக்கின்றோம். ஆனால் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை கடுமையாக எதிர்க்கின்றோம்.

இந்தத் தீர்ப்பு எந்தவகையிலும் எங்கள் தலைவரை அணுகாது.

சமாதானம் வெற்றியடையும் வகையில் அரசாங்கம் மேல்நீதிமன்றத் தீர்ப்பை வாபஸ் பெற வேண்டும். இல்லையெனில் நாடு தழுவிய எதிர்ப்புப் போராட்டம் இடம் பெறும் என்று சிறில் மேலும் தெரிவித்தார்.

(இ-6-7-16-9-43)

### மடைதிறந்த...

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிர பாகரனின் படங்களையும் பதாதைகளையும் தாங்கிக் கொண்டு வானதிர்ந்த கோஷங்களையும் எழுப்பிய வண்ணம் சென்றனர்.

பல்கலைக்கழக வளாக முன்றலில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணியில் யாழ்.குடா நாட்டு மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள், கூட்டுறவாளர்கள், வணிகர் கழக உறுபபினர்கள், ஆசிரியர்கள், கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரியர்கள்,ஆசிரிய மாணவர்கள், தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள், உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர்கள் மற்றும் பல்வேறு வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பல்லாயிரக்கணக்கில் அணி அணியாகச் சென்றனர்.

பல்கலைக்கழக வளாக முன்றலில் இருந்து ஆரம்பமான பேரணி இராமநாதன் வீதியூடாக பரமேஸ்வராச் சந்தியைச் சென்றடைந்து பின் அங்கிருந்து பலாலி வீதி வழியாக ஆரிய குளம் சந்தியைச் சென்றடைந்தது. பின் அங்கிருந்து ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாகக் கண்டி வீதியைச் சென்றடைந்து யாழ். செயலகத்தை பிற்பகல் ஒரு மணியளவில் சென்றடைந்தது.

யாழ்.செயலகத்தை பேரணி சென்றடைந்ததும் அங்கு மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கத்திடம் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சிறில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பி வைப்பதற்கான மகஜர் ஒன்றை கையளித்தார்.

மகஜரைப் பெற்றுக் கொண்ட மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் பிரதமருக்கும் மற்றும் நீதி, பாதுகாப்பு அமைச்சருக்கும் அனுப்பிவைப்பதாகத் தெரிவித்தார்.

(ம-6,7,16,9,41,43,245)

### மாவீரர்.......

அத்துடன் மாவீரர் வாரத்தித்தில் இடம்பெறும் பொதுச்சிரமாதானப் பணிகளுக்கான ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன.

மாவீரரின் பெற்றோர் கௌரவிபபு நிகழ்வுகள் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெற ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.போர் ஓய்ந்த நிலையில் இவ் வருடம் இடம் பெறவுள்ள மாவீரர் நாள் நிகழ்வு, இராணுவக் கட்டுபபாடு மற்றும் கட்டுப்பாடற்ற பிரதேசமெங்கும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை மாவீரர் வாரத்தின் இறுதி நாளன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாவீரர் தின உரை இடம் பெறவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சமாதான நகர்வுக் காலத்தில இடம் பெறும் தலைவரின் உரை சர்வதேச முக்கியத்துவம் பெற்றதாக இருக்கும் என்பதுடன் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்ப்பதுவுமாகும். (இ)

### முஸ்லிம் காங்கிரஸ்....

பிரச்சினைகள், அவர்களின் கோரிக்கைகள் என்பன இச் சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகவும, எதிர்காலத்தில் அதிகாரங்கள் பரவலாக்கப்படும் போது எந்த நிலையிலும் முஸ்லிம்களைக் குறைத்து மதிப்பிடாமல் இருப்பது அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளதாகவும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பாராளுமன்ற பகிஷ்கரிப்புப் போராட்டத்தை மேற்கொண்ட ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்று நடைபெறவுள்ள பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளனர். ( ந-5)

# சமாதான முயற்சி முன்னேற்றமடைந்தால் யப்பான் பெருமளவு உதவியை வழங்கும்

## செய்தியாளர் மாநாட்டில் யப்பான் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும் தற்போது மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகளுக்கு யப்பான் எப்போதும் ஆதரவு வழங்கத்தயாராக இருக்கின்றது.

தற்போது நடை பெற்று வரும் முயற்சிகளின் முன்னேற்றத்தை தாம் அவதானித்து வருகின்றோம். அதனுடைய தொடர்ச்சியான முன்னேற்றத்தை அவதானித்த பின்பே இலங்கைக்கு பெருமளவு உதவிவழங்குவது குறித்து முடிவெடுக்கவுள்ளோம் என யப்பானிய சமாதானத் தூதுவர் ஆகூஸி அக்காஸி நேற்று கொழும்பில் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார். யப்பானியத் தூதுவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவடடங்களுக்கு நேரடி விஜயத்தை மேற்கொணடுசேதமுற்ற இடங்களைப் பார்வையிட்டதுடன், கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் அரசியல துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்தபின் நேற்று மாலை கொழுமபு திரும்பி செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்டியிருந்தார்.

அச்செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம் பெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் எவ்வளவோ உண்டு. இதனால் சமாதானப் பேச்சுவார்த்தை பின் நோக்கிக் கூடப்போகலாம். சமாதானப் பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தைப் பொறுத்தே வடக்குக் கிழக்கு அபிவிருத்தி, முன்னேற்றம் தங்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (ம)

### பகிஷ்கரிப்பில்...

அதிபர் ஆகியோரைக் கொண்ட இக்குழு புதிய பாதுகாப்புத் திட்டங்களை வகுத்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

மூன்று இனங்களுடனும் கலந்தாலோசித்து முன்னர் இடம் பெற்ற தவறுகள் மீளவும் இடம் பெறாத வகையில் நடவடிக்கைகள் எடுப்பதுடன், முஸ்லிம்களின் கலாசாரம் மற்றும் அரசியல் உரிமைகள் அரசியற் சட்ட ரீதியாக பாதுகாக்கப்படும். அத்துடன் புதிதாக அமைக்கப்படவுள்ள பொருளாதார அரசியல் விவகார, இராணுவ விவகாரக் குழுக்களிலும் முஸ்லிமகளுக்குரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்றும் பிரதமர் அக்கடிதத்தில குறிப்பிட்டுள்ளார்.(இ)

### யப்பான்...

சுமார் இரண்டு மணிநேரம் நீடித்தது.

இப் பேச்சின் போது தமிழர் தாயகத்தில் போரினால் சீரழிந்து போன இடங்களைக் கட்டியெழுப்பு வதற்கும் மக்களின் வாழக்கைத் தரத்தை மேம்படுத் துவதற்கும், கண்ணி வெடிஅகற்றுதல்மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பாகவும் யப்பானிய அரசு பெருமளவு உதவிகளை வழங்குமென யப்பான் சமாதானத் தூதுவர் ஆகூஸி அக்காஸி தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்துள்ளார். (ம)

### ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மூடப்பட்டது

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையே நேற்று முன்தினம் இடம் பெற்ற கோஷ்டி மோதலை அடுத்து பல்கலைக்கழகம் நேற்று நண்பகல் முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கிடையிலான கோஷ்டி மோதலில் 6மாணவர்கள் காயமடைந்தனர். பல்கலைக்கழகத்தைச் சுற்றிப் பொலிஸ பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. (த-8)

### மின்சாரம்.........

தொலைக்காட்சி ஒளிபரப்பில் அலைவரிசை தெளிவற்றிருந்ததால் அதனைச் சீர்செய்வதற்காக அன்ரனாபபைப்பை திருப்பியும் சரி செய்தும் கொண்டிருந்த போது அது தற்செயலாக சாய்ந்து அருகில் வீதியால் செல்லும் மின்சாரக்கம்பி மீது விழுந்துள்ளது.

இதனால் உயர் அழுத்த மின்சாரம் தாக்கி இருவரும் ஸ்தலத்திலேயே உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தைப் பார்த்த குடும்பத்தவர்களும் உறவினர்களும் அச்சத்தினால் கூக்குரலிட்டனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த படையினர் விரைந்து வந்து பிரஸ்தாப நபர்கள் இருவரையும் மின் தாக்கத்திலிருந்து அகற்றினர்.

நாவாந்துறையில் வசிக்கும் பிரஸ்தாப குடும்பத்தவர்கள் கொட்டடியைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் யாழ். பல்கலைக்கழக பின் வீதியில் அன்ரனாப்பைப்பில் மிசாரம் தாக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் உயிரிழந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. (இ-7)


## வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகள் 2003

**வட இலங்கை சங்கீத சபையின் 2003 ஆம் ஆண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் 2002.11.11 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவுத் திகதி 2003.01.06. விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா இருபத்தைந்து (25/=).**

**விண்ணப்பப் படிவத்தைத் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 25/- பெறுமதியான காசுக் கட்டளை (மணி ஓடர்) உடன் ரூபா 4.50 பெறுமதியான தபாற் தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் (10 செ.மீ.22 செ.மீ) கடித உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.**

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வு நாடிகள்,

வட இலங்கை சங்கீத சபை,
யாழ்.வலயக் கல்விப் பணிமனை
செம்மணி வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும்இடத்தில் விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ளவும்.


வட இலங்கை சங்கீத சபை,
யாழ். வலயக் கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்.

[C/5233]



எம்மிடம-SERENDIB AIRLINE
EXPO AVIATION
LION AIR

## K.S.M. Communication



ஆகிய மூன்று வகை விமான சேவை ரிக்கற்களையும் பெற்றுக் கொள்ளலாம்

K.S.M. கொமினிக்கேசன்,
146, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P - 222 2007, 222 2508, 222 3079.

★எம்மிடம் பெறப்படும் ரிக்கற்கள் உறுதி செய்யப்பட்ட விமான ரிக்கற்கள்
★விமான நிலையம் வரையிலான இலவச பஸ் பிரயாணம்.
★மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இலவச விமான ரிக்கற்.
★குறைந்த கட்டண விமான சேவை.


இப்பபத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 09.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.